# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 20

28.05.2023




கடனாளியாகிறது அமெரிக்கா! வாஷிங்டனுக்கு நடந்தது என்ன? 09

கைத்தொழில் 12

வாய்ப்புகளை நாங்கள் தான் உருவாக்க வேண்டும் 14

# இயற்கை முறையில் மாதுளை பயிர் செய்வது எப்படி?

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# யாழ்ப்பாணத்தில் கறுவா உற்பத்தி!

❛ வடபகுதியில் பாரியளவில் கறுவா உற்பத்தியில் ஈடுபடுவதற்கு இப்போது பலர் முன்வந்துள்ளார்கள். இயக்கச்சி, முல்லைத்தீவு, மாவிட்டபுரம் போன்ற பகுதிகளில் பல நூறு ஏக்கர் நிலத்தில் கறுவாச் செய்கையில் ஈடுபடுவதற்காக பலர் தன்னுடன் தொடர்பு கொண்டிருப்பதாக இதனை ஊக்குவித்து அனுசரணை வழங்கும் புவனகுமார் தெரிவிக்கின்றார். ❜

**- பி.பார்த்தீபன் -**

யாழ்ப்பாணத்தில் கறுவாச் செய்கையை மேற்கொள்ள முடியுமா?

ஆம்! தாராளமாகச் செய்ய முடியும் என்று குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்ட சிறிய அளவிலான உற்பத்தி நடவடிக்கைகளின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. யாழ்ப் பாணத்தில் பலர் வீட்டுத் தோட்டமாக இதனை முன்னெடுத்து அதற்கான பலன் களையும் பெற்றிருப்பதை வட்டுக்கோட் டையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் போது தெரிந்துகொள்ள முடிந் தது.

வட்டுக்கோட்டை பங்குரு முருகன் கோவில் சமூக மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வை அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் புவனகுமார் ஏற்பாடு செய்திருந்தார். அவரது முயற்சியால், யாழ்ப்பாணத்தின் இயக்கச்சி, பளை, மாவிட்டபுரம் மற்றும் முல்லைத்தீவு உட் பட பல்வேறு பகுதிகளில் நூற்றுக்கணக் கான ஏக்கர் நிலத்தில் கறுவாப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முயற்சி யாளர்கள் பலர் புவனகுமாரின் வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டுள்ளார்கள். அவர்களுக்குத் தேவையான கறுவா கன்று களையும் புவனகுமார் விநியோகிக்க வுள்ளார்.

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் புலம்பெயர்ந்த புவனகுமார், அடிக்கடி இலங்கை வந்து கறுவா உற்பத்தி தொடர் பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். இலங்கையில் அதிகளவுக்கு கறுவாவை உற்பத்தி செய்யும் மாத்தறை, அம்பாந் தோட்டை மாவட்டத்துக்கு விஜயம் செய்து கறுவா தோட்டங்கள் பலவற்றையும் இவர் ஆராய்ந்துள்ளார். அங்குள்ள கறுவா ஆய்வு மையத்தின் பணிப்பாளர், ஆய் வாளர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி வடபகுதியில் கறுவா உற்பத்தி மற்றும் அதன் பெறுமதி சேர் உற்பத்திகளுக்கான வாய்ப்புக்களையும் ஆராய்ந்துள்ளார்.

**இரண்டு வார ஆய்வு**

இதன்பலனாக, கறுவா ஆய்வு நிலை யத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜி.ஜி.ஜெய சிங்க உட்பட அந்த நிறுவனத்தின் ஆய் வாளர்கள் சிலரும் வடக்கின் பல பகுதிக ளுக்கும் இரண்டு வாரகாலமாக விஜயம் செய்து கறுவா உற்பத்திக்கான வாய்ப்புக் கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்கள். இதற்காக நெடுங்கேணி, மாங்குளம், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் அவர்கள் நேரடி விஜயங்களை மேற்கொண்டார்கள். இந் தப் பகுதிகளில் சிலர் ஏற்கனவே கறுவா கன்றுகளை நட்டுள்ளார்கள். அவற்றை யும் பார்வையிட்டு அவர்களுக்கும் இதனை எவ்வாறு பெரியளவில் செய்யலாம் என் பதற்கான ஆலோசனைகளையும் இவர் கள் வழங்கியிருக்கின்றார்கள்.

புவனகுமாரின் இந்த முயற்சியின் பலனாகத்தான் வடபகுதியில் பாரியளவில் கறுவா உற்பத்தியில் ஈடுபடுவதற்கு இப் போது பலர் முன்வந்துள்ளார்கள். இயக் கச்சி, முல்லைத்தீவு, மாவிட்டபுரம் போன்ற பகுதிகளில் பல நூறு ஏக்கர் நிலத்தில் கறுவாச் செய்கையில் ஈடுபடுவதற்காக பலர் தன்னுடன் தொடர்புகொண்டிருப்ப தாக அவர் தெரிவித்தார்.

**இலங்கைக் கறுவா**

14 - 15 ஆம் நூற்றாண்டுகளில் கறுவா மேலைத் தேசங்களில் மிகவும் பெறுமதி மிக்க வாசனைத் திரவியமாக திகழ்ந்தது. அத்துடன் அது இறைச்சியைப் பாதுகாப் பதற்காகவும் முதன்மையாக பயன்படுத்தப் பட்டது. பற்றீரியா வளர்ச்சியைத் தடுக்கக் கூடியதாகவும் இருந்தது. 15 ஆம் நூற் றாண்டில் உலகில் ஆய்வுகளுக்கு இட்டுச் சென்ற பிரதான பொருளாக கறுவா விளங் கியது. அக்காலப் பகுதியில் உண்மையான கறுவா உலகத்தில் ஒரே ஒரு இடத்தில் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டது. அந்த இடம் தான் இலங்கை!

சர்வதேச சந்தையில் இலங்கை கறுவா பெறுமதி மிக்க ஒன்றாகக் காணப்பட்டது. இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக் கீஸர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் அனை வருமே கறுவா வர்த்தகத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் அதி களவுக்கு அக்கறை காட்டினார்கள் என்ப தற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. அந்தளவுக்கு அதற்கு பெறுமதி இருந்தது.

இலங்கை கறுவா வர்த்தகம் பற்றிய வரலாற்றுச் சான்றுகளை டச் உடன் படிக்கையில் காணலாம். (ஹங்குரன்கெத உடன்படிக்கை) இந்த உடன்படிக்கை கண்டியை ஆண்ட சிறி கீர்த்தி சிறீ இராஜ சிங்கம் அவர்களுக்கும் டச் அரசிற்கும் இடையே 1766 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கையில் சில குறிப்பிட்ட காட்டுப் பிர தேசங்களில் இருந்து கறுவாவை வெட்டு

வதற்கும் சீவுவதற்குமான அங்கீகாரத்தை கண்டி அரசினால் டச் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டது. அத்துடன் இதற்கு பிரதி உபகாரமாக வெளிநாட்டு படையெடுப்புகளிடம் இருந்து கண்டி அரசினை பாதுகாத்து தருவது என்று உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இலங்கை கறுவா பெற்றி ருந்த சர்வதேச கீர்த்திக்கு ஓர் உதாரணம்.

### கறுவா பணப்பயிர்






"கறுவா என்பது ஒரு பணப்பயிர்" என்று சொல்லும் புவனகுமார், இதனை இப்போது ஒரு கைத் தொழிலாக மாற்ற வேண்டிய தேவை இருப்பதாகவும், அதற்காக திட்டமிட்ட முறையில் செயற்படவேண்டியிருப்பதாகவும் குறிப்பிடுகின்றார். "அதற்கு பெருமளவு முதலீடு தேவை. இதற்காக 15 வருட கால வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கி, தகவல் மையம் ஒன்றை அமைத்து நாம் செயற்படுகின்றோம்" என்று அவர் குறிப்பிடுகின்றார்.

"அரசாங்கம் இதற்காக நிதி ஒதுக்கீடு எதனையும் தரவில்லை" என்றும், தன்னுடைய சொந்த நிதியிலேயே இதனைதான் செய்வதாகவும், தொழில்நுட்ப உதவிகளை மட்டும் அரசாங்கம் வழங்குவதாகவும் புவனகுமார் தெரிவிக்கின்றார். வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும், இந்தத் திட்டம் முதலில் ஆரம்பிக்கப்படுவதாகவும், அடுத்த கட்டமாக கிழக்கு மாகாணத்தில் இதனை முன்னெடுக்க திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

இந்தோனேஷியா, இந்தியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் கறுவா உற்பத்தியாகின்ற போதிலும், அவை இலங்கைக் கறுவாவின் தரத்தையோ, சுவையையோ கொண்டிருப்பதில்லை. அதனால்தான் இலங்கைக் கறுவாவுக்கு சர்வதேச ரீதியான வரவேற்பு இருக்கின்றது. இதேபோன்ற கறுவாவை வடக்கிலும் செய்ய முடியும். கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் பலராலும் செய்யப்பட்ட கறுவாத் தடிகள் பங்குரு முருகன் ஆலயத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டதுடன், அதனை சுவைத்துப் பார்ப்பதற்கும் அவர்களுக்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டது.

### பயிற்சிக்கான வாய்ப்பு

கறுவா உற்பத்தியில் ஈடுபட விரும்புபவர்கள் இதற்காக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள தகவல் மையத்தை தொடர்பு கொண்டால், அதற்கான ஏற்பாடுகள் இலவசமாகச் செய்துவரப்படும் எனத் தெரிவிக்கின்றார் புவனகுமார். அதன் இலக்கம் 077 0 629 013.

இவ்வாறு பயிற்சிபெற விரும்புபவர்களை மாத்தறையிலுள்ள கறுவா ஆராய்ச்சி மையத்துக்கு அனுப்பி பயிற்சிகளைக் கொடுப்பதற்கான திட்டம் உள்ளது. அவ்வாறு விரும்புபவர்களுக்கு இலவசமாக போக்குவரத்து வசதி, தங்குமிட வசதி என்பனவும் செய்துகொடுக்கப்படும். தேவை ஏற்பட்டால், இல்லது அதிகமானவர்கள் வடக்கில் விரும்பி இணைந்தால் வடபகுதியிலேயே அவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் திட்டமிட்டிருக்கின்றோம். இவ்வாறு பயிற்சி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் எனத் தெரிவித்தார் புவனகுமார்.

கறுவா தற்போது கிலோ நாலாயிரம் ரூபாவுக்கு விற்பனையாகின்றது. இது இயற்கைப் பசளையைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டதாக இருந்தால், ஒரு கிலோ பத்தாயிரம் ரூபா முதல் பதினையாயிரம் ரூபா வரையில் விற்பனையாகின்றது. இயற்கைப் பசளையை வீடுகளிலேயே ஒரு சதம் செலவில்லாமல் உற்பத்தி செய்ய முடியும் என்றும் புவனகுமார் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் பெருமளவுக்கு உற்பத்தி நடைபெறுமாக இருந்தால், கறுவா செய்கையாளர்களிடமிருந்து அவற்றை நேரடியாகக் கொள்வனவு செய்து, பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை தாமே மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதற்காக பதப்படுத்தல் நிலையம் ஒன்றும் பொருத்தமான இடத்தில் அமைக்கப்படும்.

### பெறுமதி சேர் உற்பத்திகள்

கறுவா என்னும்போது கறுவா பட்டை மட்டும்தான் எமக்குத் தெரியும். அதனை ஒரு வாசனைத் திரவியமாக இறைச்சி போன்ற கறிகளுக்குப் பயன்படுத்துகின்றோம். ஆனால், கறுவாவின் பெறுமதி சேர் உற்பத்திகள் இப்போது பெருமளவுக்கு வந்துவிட்டன. அவ்வாறு பெறுமதி சேர்த்த உற்பத்திகளின் மூலமாக அதிகளவு இலாபத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என இது தொடர்பாக புவனகுமார் தெரிவித்தார்.

இதற்கான தொழில்நுட்பம் அவசியம், இதற்கான பயிற்சிகள் தேவை, இதற்காக சிறிய தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதும் அவசியம். இவை அனைத்தையும் செய்துகொடுப்பதற்கும் தான் தயாராக இருப்பதாகவும் புவனகுமார் குறிப்பிட்டார். ஐரோப்பிய நாடுகளிலும், அவுஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற நாடுகளிலும் இதற்கு நல்ல கிராக்கி இருப்பதால் அடுத்த கட்டமாக அதனை நோக்கிச் செல்ல வேண்டிய தேவை இருப்பதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.




கறுவாவின் பெறுமதி சேர் உற்பத்திகளில் கறுவா இனிப்பு, கறுவா சொக்லேட், கறுவா எண்ணெய், கறுவா கிறீம்கள், கறுவா பெஃபியூம்கள், கறுவா சோப், கறுவா ஊதுபத்திகள், கறுவா ரீ, செண்ட் வகைகள், குளிர் பானங்கள் எனப் பலதரப்பட்ட பொருட்களை கறுவாவிலிருந்து தயாரிக்க முடியும்



என்பது கறுவாவின் பெறுமதியை மேலும் அதிகரிக்கின்றது.

கறுவா இனிப்பு, ரொஃபி, சொக்லேட் என்பன மிகவும் சுவையானவை. இவற்றை இலங்கையிலேயே தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யமுடியும்.

(06ஆம் பக்கம் பார்க்க)

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# மலையகம் 200

மலையக மக்கள் இலங்கைக்கு வந்த 200 ஆவது ஆண்டு நிறைவு, இப்போது கொண்டாடப்படுகின்றது. பொருளாதார நோக்கங்களுக்காகவே பிரித்தானியரால் அவர்கள் அழைத்துவரப்பட்டனர். தமது கடுமையான உழைப்பால், இலங்கையின் பொருளாதாரத்துக்கு உயிர் கொடுத்தவர்கள் அவர்கள். இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பில் கணிசமான பங்களிப்பைச் செய்தவர்கள். ஆனால், அவர்களுடைய பொருளாதாரம் – வாழ்க்கைத் தரம் எவ்வாறிருந்தது, இருக்கின்றது, அதனை உயர்த்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையிட்டு “மலையகம் 200” கொண்டடப்படும் இந்தக் காலப்பகுதியில் நாம் சிந்திக்க வேண்டும்.

பெருந்தோட்டப் பகுதியில் வேலை செய்வதற்காக என்றே மலையகத் தமிழர்கள், அழைத்து வரப்பட்டார்கள். தேயிலை, ரப்பர், கோப்பி போன்றன அதிகளவு வருமானத்தை பிரித்தானியர்களுக்குப் பெற்றுக்கொடுத்தமையால், குறைந்த கூலியில் வேலை செய்யக்கூடியவர்களை அவர்கள் தேடினார்கள். மலையகத் தமிழர்களால், பிரித்தானியர்களுக்கும் அதிக வருமானம் கிடைத்தது. சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை அரசாங்கத்துக்கும் அதிகளவு அந்நியச் செலாவணியை பெற்றுக்கொடுத்தவர்கள் அவர்கள்தான். அதாவது, இலங்கையை பொன்விளையும் பூமியாக மாற்றியவர்கள் அவர்கள்.

ஆனால், நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம் அவர்களுடைய உரிமைகளுக்கு வேட்டுவைப்பதாகவே அமைந்திருந்தது. சுதந்திரம் கிடைத்த அடுத்த வருடமே அவர்களுடைய குடியுரிமை, வாக்குரிமை என்பன பறிக்கப்பட்டன. அதாவது, அவர்கள் அரசியலில் அனாதைகளாக்கப்பட்டனர். ஆனால், அப்போதும் அவர்கள் உழைத்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

இந்தக்காலத்தில்தான் இலங்கை வந்த சிங்கப்பூரின் சிற்பி லீகுவான் யு, “சிங்கப்பூரை இலங்கையைப் போல மாற்ற வேண்டும்” என்று கூறிருந்தார். அந்தளவுக்கு இலங்கையின் நிலை அப்போது உயர்ந்திருந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு திடமாக இருந்தமைக்கு மலையக மக்களின் கடினமான உழைப்பு காரணம். நாட்டின் பொருளாதாரத்துக்கு மலையக மக்களின் பங்களிப்பு பிரமாண்டமானதாக இருந்தது.

1964 இல் சிறிமா சாஸ்திரி உடன்படிக்கை மூலமாக பெருமளவு மலையக மக்கள் நாடு கடத்தப்பட்டார்கள். அவர்களுடைய ஒப்புதல் இல்லாமல், இலங்கை, இந்திய அரசுகள் தமது நலனுக்காக இதனைச் செய்தன.

இன்று மலையக மக்களுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டாலும், தினசரி ஆயிரம் ரூபா வேதனைத்தை பெறுவதற்கே அவர்கள் போராடுகின்றார்கள். காணியுரிமைகளாக அவர்கள் போராடுகின்றார்கள்.

200 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இந்த மக்கள், நாட்டின் பொருளாதாரத்துக்காக தம்மையே உரமாக்கிய இந்த மக்களின் அடிப்படையான அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்பதைத்தான் “மலையகம் 200” வலியுறுத்துகின்றது.

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## டொலர் பிரச்சினை

நாட்டில் டொலர் பிரச்சினை தீவிரமாகவுள்ள நிலையில், இந்திய நாணயத்தை பயன்படுத்துவது தொடர்பாக மூன்று வாரங்களுக்கு முன்னர் பொருண்மியம் நல்ல கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. கடந்த வார இதழிலும், உலக அரங்கில் டொலருக்கு மாற்றாக மற்றொரு நாயணத்தைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து, சிறப்பான கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தீர்கள். இவ்வாறு நிதிப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை நாம் அறிந்துகொள்வதற்கு இன்று தமிழில் பொருண்மியம் மட்டுமே இருக்கின்றது. பொருளாதாரம், நிதித்துறையில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் பயனுள்ளதாக இந்தக் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன.

**எம்.விக்னேஸ்வரி, - வத்தளை.**

## திரவப் பால் நுகர்வு

திரவப் பால் நுகர்வு என்ற தலைப்பில் டாக்டர் கிருபானந்தகுமாரன் எழுதியதைப் படித்தேன். மாட்டுப் பண்ணைகளை அதிகளவுக்குக் கொண்டுள்ள வன்னி போன்ற பகுதிகளில் கூட, திரவப் பாலைப் பெற முடியாதவர்களாக எம்மவர்கள் இருப்பது ஆச்சரியமானதாக இருந்தது. அதற்கான காரணங்களையும் அவர் விளக்கியிருந்தார். இனறைய நிலையில், உள்ளூர் உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும். அதேவேளையில், உற்பத்தியாளர்கள் நட்டமடையாத வகையில் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான வழிகளையும் அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். வன்னி போன்ற பகுதிகளில் உள்ள போஷாக்கு குறைவாகவுள்ள எமது குழந்தைகளுக்கு திரவப்பால் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

**எம்.மங்களேஸ்வரன், - வவுனியா.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!
அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -
**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ------------------------------------------------
**முகவரி** - ------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------
**சந்தாக் காலம்** - ------------------------------------------
**செலுத்திய தொகை** - ------------------------------------
**செலுத்திய திகதி** - ---------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,53,900 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,67,850 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** உருளைக்கிழங்கு யாழ்ப்பாணத்திலும் உற்பத்தியாகின்றது. நுவரெலியாவிலும் விளைகின்றது. இந்த நிலையில் பாகிஸ்தானிலிருந்து எதற்காக இறககுமதி செய்கிறார்கள்?

**ந.சண்முகலிங்கம்**
**கோண்டாவில், யாழ்ப்பாணம்.**

**பதில் -** அரசாங்கத்திடம் உறுதியான பொருளாதாரக் கொள்கையோ, விவசாயக் கொள்கையே இல்லாமலிருப்பதுதான் இதற்குக் காரணம்.

உள்நாட்டில் முட்டை உற்பத்தியை மேம்படுத்துவதற்குப் பதிலாக, இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்து, பொருளாதார நெருக்கடியால் துவண்டு போய்க்கிடக்கும் உற்பத்தி யாளர்களுக்கு மரண அடியைக் கொடுத்துள்ளது அரசாங்கம். இதற்குள் கட்டுப்பாட்டு விலை வேறு. ஐந்து ரூபா கூட்டி விற்றவருக்கு ஐந்து லட்சம் அபராதம்.

உருளைக்கிழங்கு உற்பத்தியிலும் இதுதான் நடக்கின்றது. அந்நியச் செலாவணிப் பிரச்சினையை எதிர்நோக்கும் ஒரு நாடு முடிந்தளவுக்கு இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டும். உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும். ஆனால், எமது அரசாங்கம் இதற்கு முற்றிம் முரணாக நடக்கின்றது.

அரசாங்கத்தின் தவறான விவசாயக் கொள்கையால் நுவரெலியா உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். பெருமளவு செலவில் உற்பத்தி செய்த உருளைக்கிழங்கை விற்பனை செய்ய முடியாமல் அந்த விவசாயிகள் திண்டாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேர காலத்தை கருதாமல் அவ்வப்போது பெருமளவு உருளைக்கிழங்கை அரசாங்கம் இறக்குமதி செய்வதால், அதன் விலையில் தளம்பல் நிலை காணப்படுகின்றது. இந்த நிலை தொடர்ந்தால், நுவரெலியா விவசாயிகள் உற்பத்தியைக் கைவிடுவதைவிட வேறு வழி இருக்காது.

உள்நாட்டுச் சந்தையில் நுவரெலியா உருளைக்கிழங்கும் உள்ளது. பாகிஸ்தான் உருளைக்கிழங்கும் உள்ளது. பாக். கிழங்கின் விலை உள்ளூர் கிழங்கின் விலையைவிட பெருமளவு குறைவாக உள்ளது. இதனால், நுவரெலியா கிழங்கு தேங்கிப்போய்க் கிடக்கின்றது.

பாரிய பொருளாதார - அந்நியச் செலாவணிப் பிரச்சினைளை எதிர்கொண்டிருக்கும் நிலையில், யாரையோ திருப்திப்படுத்துவதற்காகத்தான் அரசாங்கம் இந்த இறக்குமதியை திறந்துவிட்டதா என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. எதிர்க்கட்சிகளும் இவ்விடயத்தில் மௌனமாகவே இருக்கின்றன.

அவசரமான தேவை ஏற்பட்டு இறக்குமதியைத் திறந்துவிட்டிருந்தால் அதனை நியாயப்படுத்த முடியும். பொருளாதார நெருக்கடியால் கசப்பான பாடங்கள் பல வற்றைப் படித்த பின்னரும், அதே தவறைத்தான் அரசாங்கம் செய்கின்றதென்றால், தவறு எங்கேயுள்ளது? என்பதை மக்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 450/= |
| பச்சைமிளகாய் | - 260/= |
| தக்காளி | - 320/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 180/= |
| கோவா | - 400/= |
| கரட் | - 260/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 160/= |
| வாழைக்காய் | - 120/= |
| சின்ன வெங்காயம் | - 350/= |
| பெரிய வெங்காயம் | - 140/= |
| பாகற்காய் | - 450/= |
| வெண்டக்காய் | - 200/= |
| கருணைக்கிழங்கு | - 120/= |
| பயற்றங்காய் | - 400/= |
| லீக்ஸ் | - 360/= |
| பீற்றூட் | - 350/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 1000/= |
| போஞ்சி | - 550/= |
| கத்தரி - தம்புள்ள | - 450/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 193/= |
| கனடா டொலர் - | 217/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 318/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 218/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 366/= |
| சுவிஸ் பிராங் - | 326/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 204/= |
| கனடா டொலர் - | 229/= |
| சீன யுவான் - | 45/= |
| யுரோ - | 335/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் - | 231/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 384/= |
| சுவிஸ் பிராங் - | 345/= |
| அமெரிக்க டொலர் - | 310/= |





(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலமாகப் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், பெருமளவு அந்நியச் செலாவணியையும் பெறக்கூடியதாக இருக்கும்.

**உற்பத்தி, பயன்பாடு**

கறுவாப்பட்டை அதிகளவில் குவில்களாக (quills) அமைப்பிலேயே கிடைக்கப் பெறுகின்றது. குவில்கள் உற்பத்திகள் இலங்கையில் தனித்துவம்மிக்கவை. சீவப்பட்ட பட்டைகளை சுருட்டுவதால் குவில்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றில் பலவற்றினை ஒன்று சேர்த்துத் தேவையான நீளத்திற்கு குழாய் போன்ற கட்டமைப்பில் அதனை பெற்றுக் கொள்ளலாம்.

அதற்கும் மேலாக கறுவாப்பட்டை துண்டுகள் சிறு துண்டுகளாக (சிப்ஸ்) குவில்களாக அல்லது இறகுகள். கிடைக்கப் பெறுகின்றன. கறுவா ஒரு தனித்தவம் மிக்க மரமாகும். அதன் இலையின் பட்டைகளில் மற்றும் வேர்களில் அத்தியவசிய எண்ணெய் காணப்படுகின்றன. ஆனால் அவற்றினது இரசாயன உட் கூறுகள் ஒவ்வொன்றில் இருந்தும் முழுமையாகவே வேறுபடுகின்றன. அத்தியவசிய எண்ணைய்கள் பட்டை மற்றும் இலைகள் ஆகிய இரண்டில் இருந்தும் உற்பத்தி செய்யப்படுகின்றன. பட்டை எண்ணெய் பிரதன இரசாயணம் சினமல்டிஹைட் ஆகும். அத்துடன் இலை எண்ணெயில் இயுஜினோல் ஆகும். கறுவா தூய வடிவிலும் கறி கலவை உள்ளீடாகவும் மற்றும் துகள் வடிவிலும் கிடைக்கப் பெறுகின்றன.

கறுவா பெரும்பாலும் சமையலுக்கும், வெதுப்பக தயாரிப்புக்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. கறுவா ஒரு பல்துறை மசாலாவாகும். எந்த ஒரு உணவிற்கும் அதனை சேர்த்துக் கொள்ளமுடியும். அதாவது சலாது, இனிப்புப் பண்டங்கள் பான வகைகள் சூப், அவியல் மற்றும் சோர்ஸ் என்பனவாகும். சூடான நீரில் கறுவா பட்டை துண்டுகளை அமிழ்த்தி கறுவா பாணம் தயாரிப்பதானது அமெரிக்க நாடுகள் மத்தியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாகும். அதே போல் கறுவா நறுமணம் மூடப்பட்ட தேயிலையும் பிரபல்யம் பெற்று வருகின்றது. சீனாவில் ஆயுர்வேத மருத்துவத்தில் பொதுவான உள்ளீடாக இது பயன்படுத்தப்படுகின்றது. கறுவா இலை எண்ணெய் மற்றும் கறுவாப் பட்டை எண்ணெயில் உணவு உற்பத்தி நறுமண கைத்தொழில் மற்றும் மருத்துவ கைத்தொழில் ஆகியவற்றில் வாசனை ஊட்டுவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.



## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

-------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

-------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

-------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

-------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

-------------------------------------

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

-------------------------------------

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

-------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு 0766482303

-------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

-------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

-------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

-------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

-------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

-------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்




## classified advertisement

பாடசாலை மாணவர்களுக்கான புத்த கப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்ட ணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தை யும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்க ளது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தர வாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவ தற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங் களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உரு வாக்கி தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 075378053

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற் றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக் கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

-------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ் களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்ப னைக்குள்ளது.
தொடர்புகளுக்கு - 077 6566508.

-------------------------------------

## காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத் தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்ப னைக்கு. இயற்கையான சூழலில் உங்க ளின் ஓய்வுக் காலத்தினை அமைதியாக வும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------

## தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற் பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகை களைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கிய மும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல மான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந் தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறை யில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்து தரப்படும்.
0775652282

-------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப் படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்ப வர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 773853765

-------------------------------------

## கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடத் துரித மீட்டல் புலனக்குழு வில்(WhatsApp group) இணைய அனு மதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113



# கடனாளியாகிறது அமெரிக்கா! வாஷிங்டனுக்கு நடந்தது என்ன?

- சோ.வள்ளியப்பன் -

இலங்கை மற்றும் பாகிஸ்தானில் வரலாறு காணாத பொருளாதார பிரச்சினை ஏற்பட்டிருப்பது நாம் அறிந்ததே. இப்போது உலகின் மிகப்பெரும் பொருளாதார நாடான, அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும், 'மேலும் கடன் வாங்கமுடியா நெருக்கடி'தான் உலகின் பேசுபொருளாக உள்ளது. மட்டுமில்லாமல், அது நிதிசார் உலகில் பெரும் கலக்கத்தையும் உருவாக்கி இருக்கிறது. இதை 'அமெரிக்கன் டெட் சீலிங் கிரைசிஸ்' என்கிறார்கள்.

கொரோனா ஊரடங்குகளால் ஏற்பட்ட பொருளாதார சுணக்கத்தை சரி செய்ய அமெரிக்க அரசு 900 பில்லியன் டொலர் செலவு செய்தது. இதனால் ஏற்பட்ட பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பெடரல் ரிசர்வ் குறுகிய காலத்தில் மிக அதிக அளவில் வட்டியை உயர்த்தியது. இதனால் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்றான 'சில வங்கிகள் திவால்' என அமெரிக்கா சந்தித்துக்கொண்டிருக்கும் பொருளாதார சிக்கல்களின் வரிசையில் அடுத்ததாக வந்திருப்பதுதான் 'டெட் சீலிங் கிரைசிஸ்'.

அமெரிக்கக் கருவூலத்தின் செயலர், ஜேனட் எல். எல்லென். அவர்தான் அரசின் வரவு செலவுக்கான நிதியை நிர்வகிப்பவர். அவர் இந்த 'டெட் சீலிங் கிரைசிஸ்' சூழலை பேரழிவு என்கிறார். காரணம், இதனால் வரும் ஜூன் 1 முதல் அமெரிக்க அரசு அது செய்தாக வேண்டிய செலவுகளுக்குக் கூட நிதி இல்லாத நிலை உருவாகியிருக்கிறது என்கிறார்.

ஊதியம் கொடுக்க முடியாது: அப்படி ஒரு நிதி இல்லா நிலை வந்தால், அரசு ஊழியர்களுக்கு, இராணுவத்தினருக்கு ஊதியம், ஓய்வூதியம், கடன்களுக்கான வட்டி, மருத்துவம், நலத்திட்டங்கள் மற்றும் அரசின் பிற திட்டங்களுக்கான நிதி, டேக்ஸ் ரீபண்ட் என பலவற்றையும் கொடுக்க முடியாமல் போகும்.

இது சாதாரண சிக்கல் இல்லை. மாபெரும் சிக்கல். கடன் பத்திர சந்தை, பங்குச்சந்தை, வங்கிகள் என பல்வேறு பொருளாதார சந்தைகளிலும் சூறாவளி வீசும். 2008ஆம் ஆண்டு நடந்தது போல கூட ஆகலாம். அதனால்தான் அமெரிக்க கருவூலத்தின் செயலர் எல்லென் இதை நிதிசார் பேரழிவு என்று குறிப்பிட்டு அஞ்சுகிறார்.

அமெரிக்கா உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடு. அதன் ஆண்டு உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) மதிப்பு 26.85 டிரில்லியன் டொலர். இந்தியாவின் ஜிடிபி 3.38 டிரில்லியன் டொலர். இப்படிப்பட்ட அமெரிக்காவுக்கு, அதன் ஊழியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாத அளவு என்ன நிதி நெருக்கடி வரமுடியும் என்று ஆச்சரியப்படலாம்.



> இது சாதாரண சிக்கல் இல்லை. மாபெரும் சிக்கல். கடன் பத்திரச் சந்தை, பங்குச்சந்தை, வங்கிகள் என பல்வேறு பொருளாதார சந்தைகளிலும் சூறாவளி வீசும். 2008ஆம் ஆண்டு நடந்தது போலக் கூட ஆகலாம். அதனால்தான் அமெரிக்க கருவூலத்தின் செயலர் எல்லென் இதை நிதிசார்பேரழிவு என்று குறிப்பிட்டு அஞ்சுகிறார்.

### 31.5 டிரில்லியன் டொலர் கடன்

எவ்வளவு பெரிய பணக்காரராக இருந்தாலும் அவருக்கு என்ன கடன் இருக்கிறது என்று பார்க்க வேண்டுமல்லவா? அமெரிக்க அரசுக்கு இருக்கும் மொத்தக் கடன் பெப்ரவரி 2023 நிலைவரப்படி, 31.5 டிரில்லியன் டொலர். நாட்டின் ஓராண்டு ஜிடிபியைக் காட்டிலும் 20 சதவீதத்துக்கும் அதிகம். அமெரிக்க அரசுக்கும் வருமானம் போதவில்லை.

செலவுக்குப் பணம் வேண்டும். கடன் வாங்குவதுதான் வழி. அதை ஒவ்வொரு வருடமும் செய்துதான் மொத்தக் கடனளவு இவ்வளவு பெருகிவிட்டது. அதனால் என்ன! வழக்கம் போல் புதிய கடன்கள் வாங்கி விட்டுப் போகவேண்டியதுதானே என்று கேட்கலாம். அமெரிக்க அதிபர் ஜோ பைடனும், திறைசேரி செயலர் எலெனும் அதைத்தான் செய்ய நினைக்கிறார்கள். ஆனால், அது முடியாத நிலை உருவாகி விட்டது.

அந்த நிலை உருவாக காரணம், அரசு எவ்வளவு கடன் வாங்கலாம் என்று ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டிருந்த அளவான 31.38 டிரில்லியன் டொலர்அளவை கடந்த 2023, ஜனவரி மாதம் 19ஆம் தேதியே அமெரிக்கா நெருங்கியாயிற்று. அதன்பின் அரசு செய்யத் திட்டமிட்டிருந்த சில முதலீடுகளைத் தள்ளிவைத்து நிலைமையை சமாளித்து வருவதாகக் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட சமாளிப்புக்கள் எல்லாம் மே மாதம் வரை சாத்தியம் என்றும் ஜூன் 1 முதல் கருவூலத்தில் சுத்தமாக பணம் இருக்காது என்றும், அதனால் கொடுக்க வேண்டிய எல்லாச் செலவுகளும் தடைப்படும் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

### நாடாளுமன்ற ஒப்புதல்

நிலைமையை சமாளிக்க கடன்தான் வழி. அதற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் புதிய ஒப்புதல் வேண்டும். ஒப்புதல் பெற எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவு வாக்கு வேண்டும். எதிர்க்கட்சியினர் அதிபர் ஜோ பைடனை

(23ஆம் பக்கம் பார்க்க)




**வணிக வெற்றியை அடைவதற்கு அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் தொடர்ச்சியான கற்றல் ஆகியன தேவை என்பதை நினைவில் கொள்ளுங்கள். கவனத்துடன் இருங்கள், உந்துதலாக இருங்கள், சிறந்து விளங்க பாடுபடுவதை ஒருபோதும் நிறுத்தாதீர்கள்**

# உங்கள் வணிக வெற்றிக்கு செய்ய வேண்டியது என்ன?



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

வணிக வெற்றி என்பது ஒரு வணிக நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களின் சாதனையின் விளைவாக நேர்மறையான முடிவுகள் மற்றும் நிலையான வளர்ச்சி என வரையறுக்கப்படுகின்றது. ஒரு வணிகமானது அதன் வளங்களைத் திறம்படப் பயன்படுத்துதல், வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்தல், இலாபத்தை ஈட்டுதல் மற்றும் சந்தையில் போட்டியாளர்களை விடச் சகல விடயங்களிலும் சாதகமான நிலைமையைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

வணிக வெற்றியைப் பல்வேறு குறிகாட்டிகளைப் (Indicators) பயன்படுத்தி அளவிட முடியும், அவற்றுள் சில:

நிதி செயற்றிறன்: இலாபகரமான மற்றும் நிதி ரீதியாக நிலையான வணிகம் பெரும்பாலும் வெற்றிகரமாக கருதப்படுகின்றது. வருவாய் வளர்ச்சி, இலாப வரம்புகள், முதலீட்டின் மீதான வருவாய் (ROI) மற்றும் பணப்புழக்கம் போன்ற முக்கிய நிதி அளவீடுகள் வணிகத்தின் நிதி வெற்றியை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

2. சந்தை நிலை: ஒரு வெற்றிகரமான வணிகம் அதன் சந்தை இலக்கில் (Target Market) வலுவான நிலையைக் கொண்டுள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க சந்தைப் பங்கு, விசுவாசமான வாடிக்கையாளர் தளம் மற்றும் போட்டியாளர்களுடன் ஒப்பிடும்போது சாதகமான நற்பெயர் என்பவற்றைக் கொண்டிருக்கும்.

3. வாடிக்கையாளரின் திருப்தி: வணிக வெற்றிக்கு வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளைச் சந்திப்பதும், எதிர்பார்க்கப்பட்ட சேவைகளை விட அதிகமாக வழங்குவதும் முக்கியம். ஒரு வெற்றிகரமான வணிகமானது வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேநேரம் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்கும் உயர்தர தயாரிப்புகள் அல்லது சேவைகளை தொடர்ந்து வழங்கிவருவதனை உள்ளடக்கும்.




4. புதுமை மற்றும் தகவமைப்பு (Innovation and Adaptability): வெற்றிகரமான வணிகங்கள் பெரும்பாலும் புதுமைகளைத் தழுவி சந்தையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு செயல்படுகின்றன. அவர்கள் தொடர்ந்து தங்கள் தயாரிப்புக்கள், செயன்முறைகள் மற்றும் வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்த புதிய வழிகளைத் தேடுவதுடன் தமது போட்டியாளர்களை விடவும் முன்னணியில் இருத்தல் வேண்டும்.

5. பணியாளர் திருப்தி மற்றும் ஈடுபாடு: வெற்றிகரமான வணிகமானது அதன் ஊழியர்களை மதிப்பது மற்றும் நேர்மறையான பணிச்சூழலை வளர்க்கிறது. ஈடுபாடுள்ள மற்றும் ஊக்கமளிக்கும் பணியாளர்கள் உற்பத்தித்திறன், புதுமை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றிற்கு பங்களிப்பதாக இருத்தல் வேண்டும்.

6. சமூக மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பு: தற்காலத்தில் சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான நிறுவனங்களின் உறுதிப்பாட்டின் அடிப்படையில் வணிகங்களும் மதிப்பீடு செய்யப்படுகின்றன. வெற்றியானது சமூகத்தின் மீதான வணிகத்தின் நேர்மறையான தாக்கம், நெறிமுறை வணிக நடைமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஆகியவற்றால் அளவிடப் படலாம்.

எனவே வணிக வெற்றியானது தொழில்துறை, நிறுவனத்தின் குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளைப் பொறுத்து

வரையறை மாறுபடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். மற்றும் ஒரு வணிகத்தின் வெற்றி என்பது மற்றொன்றிலிருந்து வேறுபட்டிருக்கலாம்.

### முக்கிய நிதி அளவீடுகள்

ஒரு நிறுவனத்தின் நிதி ஆரோக்கியம் மற்றும் செயற்றிறனை மதிப்பிடுவதற்கு வணிகங்களும் முதலீட்டாளர்களும் பயன்படுத்தும் பல முக்கிய நிதி அளவீடுகள் உள்ளன. சில முக்கியமான நிதி அளவீடுகள் பின்வருமாறு:

1. வருவாய்: வருவாய் என்பது பொருட்கள் அல்லது சேவைகளின் விற்பனையின் மொத்தப் பணத்தின் அளவைக் குறிக்கிறது. இது ஓர் அடிப்படை அளவீடு ஆகும். இது நிறுவனத்தின் வருமானத்தை உருவாக்கும் திறனைக் காட்டுகிறது.

2. மொத்த இலாப வரம்பு: மொத்த இலாப வரம்பு என்பது ஒரு நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளின் இலாபத்தை அதன் வருவாயை விற்கப்பட்ட பொருட்களின் விலையுடன் (COGS) ஒப்பிடுவதன் மூலம் அளவிடுகிறது. இது வருவாயில் இருந்து COGSIக் கழித்து, அதன் முடிவை வருவாயால் வகுத்து, ஒரு சதவீதத்தைப் பெற 100 ஆல் பெருக்குவதன் மூலம் கணக்கிடப்படுகிறது.

3. நிகர இலாப அளவு: ஒரு நிறுவனத்தின் மொத்த இலாபத்தை அதன் வருவாயுடன் ஒப்பிடும்போது நிகர வருவாயின் சதவீதத்தை (வருவாய் கழித்தல் அனைத்து செலவுகளையும்) கணக்கிடுகிறது. ஒரு நிறுவனம் தனது செலவுகளை எவ்வளவு திறமையாக நிர்வகிக்கிறது என்பதை இது குறிக்கிறது.

4. ஒரு பங்குக்கான வருவாய் (EPS): EPS என்பது பொதுவான பங்குகளின் நிலுவையில் உள்ள ஒரு நிறுவனத்தின் இலாபத்தின் அளவீடு ஆகும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிலுவையில் உள்ள பங்குகளின் சராசரி எண்ணிக்கையால் நிகர வருமானத்தைப் பிரிப்பதன் மூலம் இது கணக்கிடப்படுகிறது.

5. சொத்துக்களின் மீதான வருவாய் (சுழுயு): ஒரு நிறுவனம் அதன் சொத்துக்களை இலாபத்தை ஈட்ட எவ்வளவு திறமையாகப் பயன்படுத்துகிறது என்பதை சுழுயு அளவிடுகிறது. நிகர வருமானத்தை சராசரி மொத்த சொத்துக்களால் வகுத்து கணக்கிடப்படுகிறது.

6. ஈக்விட்டி மீதான வருமானம் (ROE - Return on equity): ROE பங்குதாரர்களின் ஈக்விட்டிக்காக உருவாக்கப்பட்ட வருவாயைக் காட்டுகிறது. ஒரு நிறுவனம் அதன் பங்குதாரர்களால் முதலீடு செய்யப்படும் பணத்திலிருந்து எவ்வளவு திறம்பட இலாபம் ஈட்டுகிறது என்பதை இது அளவிடுகிறது. நிகர வருவாயை சராசரி பங்குதாரர்களின் ஈக்விட்டியால் வகுப்பதன் மூலம் சுழுநு கணக்கிடப்படுகிறது.

7. கடனுக்கு ஈக்விட்டி விகிதம்: ஈக்விட்டியுடன் ஒப்பிடும்போது கடனிலிருந்து வரும் ஒரு நிறுவனத்தின் நிதியுதவியின் விகிதத்தை கடன்-ஈக்விட்டி விகிதம் குறிக்கிறது. மொத்தக் கடனை மொத்த பங்குதாரர்களின் பங்கு மூலம் வகுத்து கணக்கிடப்படுகிறது. இந்த விகிதம் ஒரு நிறுவனத்தின் நிதிச் செல்வாக்கு மற்றும் கடன் பொறுப்புகளைக் கையாளும் திறனை மதிப்பிட உதவுகிறது.



8. நடப்பு விகிதம்: நடப்பு விகிதம் ஒரு நிறுவனத்தின் குறுகிய கால பணப்புழக்கம் மற்றும் அதன் நடப்பு சொத்துகளைப் பயன்படுத்தி அதன் நடப்பு பொறுப்புகளை சந்திக்கும் திறனை மதிப்பிடுகிறது. நடப்பு சொத்துக்களை நடப்பு பொறுப்புகளால் பிரிப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது. 1க்கு மேல் உள்ள விகிதம் ஒரு நிறுவனம் அதன் குறுகிய கால கடமைகளை ஈடு செய்ய முடியும் என்பதைக் குறிக்கிறது.

Current Ratio என்பது ஒரு நிறுவனத்தின் பணப்புழக்க விகிதத்தைக் குறிக்கிறது. இது ஒரு நிறுவனத்தின் குறுகிய கால அளவில் செலுத்த இயலும் கடனின் அளவு அல்லது ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய தொகையின் திறனை அளவிட பயன்படுகிறது. ஒரு நிறுவனம் அதன் தற்போதைய கடன் மற்றும் செலுத்த வேண்டிய ஏனைய தொகையைச் செலுத்த, அதன் தற்போதைய இருப்புநிலை சொத்துக்களில் எவ்வளவு அதிகரிக்க வேண்டும் என்பதை முதலீட்டாளர்கள் கணக்கிட உதவுகிறது.

Current Ratio = Current Assets / Current Liabilities

நியம நடப்பு விகிதம் 2:1ஆக இருத்தல் வேண்டும்.

9. இலவச பணப்புழக்கம் (FCF):

FCF = OCB – I

FCF = Free Cash Flow

OCB = Net Operating Profit After Taxes

I = Investment during period (Time)

FCFஆனது ஒரு நிறுவனம் அதன் செயல்பாடுகளிலிருந்து மூலதனச் செலவினங்களைக் கணக்கிட்ட பிறகு உருவாக்கப்படும் பணத்தை அளவிடுகிறது. இது விரிவாக்கம், கடனைத் திருப்பிச் செலுத்துதல், பங்குலாபம் அல்லது பிற நோக்கங்களுக்காகக் கிடைக்கும் பணத்தைக் குறிக்கிறது. செயல்பாட்டு பணப்புழக்கத்திலிருந்து மூலதனச் செலவினங்களைக் கழிப்பதன் மூலம் FCF கணக்கிடப்படுகிறது.

10. பணப்புழக்கம் (OCF): Operating Cash Flow (OCF) ஒரு நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகளால் உருவாக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்படும் பணத்தை அளவிடுகிறது. இது விற்பனையிலிருந்து இயக்கச் செலவுகள் மற்றும் வரிகள் கழிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட பணத்தை பிரதிபலிக்கிறது.

இந்த நிதி அளவீடுகள் ஒரு நிறுவனத்தின் இலாபம், செயற்றிறன், பணப்புழக்கம், அந்நியச் செலாவணி மற்றும் பணப்புழக்கம் பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது. ஒரு நிறுவனத்தின் நிதி செயற்றிறனைப் பற்றிய விரிவான புரிதலைப் பெற இந்த அளவீடுகளை ஒன்றிணைத்து, தொழில்துறை மற்றும் நிறுவனம் சார்ந்த காரணிகளின் சூழலில் அவற்றை பகுப்பாய்வு செய்வது முக்கியம்.

வணிக வெற்றியை அடைவதற்கு அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் தொடர்ச்சியான கற்றல் ஆகியன தேவை என்பதை நினைவில் கொள்ளுங்கள். கவனத்துடன் இருங்கள், உந்துதலாக இருங்கள், சிறந்து விளங்க பாடுபடுவதை ஒருபோதும் நிறுத்தாதீர்கள்.

கட்டுரையாளரை தொடர்புகொள்ள-
+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

## எங்கள் வாழ்வும் வளமும்





# கைத்தொழில்

- தமிழ்க்கவி -

“கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலை உனக்கில்லை ஒப்புக் கொள்”

காலம் முழுதும் எமது பாவனைக்கான பொருட்களை நாமேதான் உற்பத்தி செய்தோம். தகரம் அலுமினியம் என வந்தபோது அதற்கான விலைகள் எம்மை அச்சுறுத்தின, ஆனாலும் நாங்கள் அவற்றை வாங்கித்தானே ஆகவேண்டும். மனித மனங்கள் அப்படித்தான் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இன்றுள்ள எமது வீடுகளை நாம் ஒரு சிறு ஆய்வுக்கு உட்படுத்தினால் எமக்கே பெரிய அதிர்ச்சியாகத்தான் இருக்கும். காரணம் நாங்கள் எதை வாங்க வேண்டும் என்பதை நாங்கள் தீர்மானிப்பதில்லை. அதை கோப்ரேட் கம்பனிகள்தான் தீர்மானிக்கின்றன. எமக்குத் தேவையோ இல்லையோ ஒரு பொருளை தொலைக்காட்சி விளம்பரத்தில் பார்த்து விட்டால். அதை வாங்கும் வரை மனம் ஒரு நிலையில் இருக்காது. இப்படியாகவே நாம் வாங்கிப் போட்ட மொத்தப் பொருட்களையும் ஒரு தடவை திரும்பத் தேடிப்பாருங்கள். நாம் தினசரி உபயோகிப்பவை எத்தனை, வாராந்தம் உபயோகிப்பவை எத்தனை, மாதம் ஒருமுறை உபயோகமாவது எத்தனை, வருடாந்தம் தேவைப்படுவது எத்தனை?

எப்போதாவது ஒருமுறை தேவையாகி பின்னால் தேவைப்படாமலே பரணில் கிடப்பவை எத்தனை? நிச்சயம் அது உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கும். இன்றைய வீடுகளை அடைத்துப் போட்டிருக்கும் அதிகமான பொருட்களை அதன் பாவனைக்கும் அப்பால். அவற்றை எங்கே ஒதுக்கி வைப்பது என்ற கவலை வீட்டின் பெண்களுக்கு இருப்பதை மறுக்க முடியாது. ஆயினும் என்ன அவர்கள் மறுபடியும் எதையாவது விளம்பரத்தில் கண்டால் அது கட்டிலா கரண்டியா என்பது ஒரு விடயமே இல்லை வாங்கி வீட்டில் வைத்தாக வேண்டும். இதுதான் வாழ்க்கையின் மிகப் பெரிய மகிழ்ச்சி என நினைக்கிறோம்.

பொலித்தீன் இல்லாத நைலோன் இல்லாத ஒரு காலத்தில் எப்படி வாழ்ந்தோம் என்பதை எமது மூத்தவர்களிடம் கேட்டுப்பாருங்கள். அஞ்சறைப்பெட்டி அடுக்குப் பெட்டி மூடல்பெட்டி கடகப்பெட்டி நார்க்கடகம் தட்டுப்பெட்டி கொட்டப்பெட்டி சுளகு பாய் தடுக்கு உமல் குட்டான் நீத்துப்பெட்டி நீரிறைக்கப்பட்டை என எத்தனை எத்தனை வகைப்பாத்திரங்கள் இருந்தன. எந்த வகையிலும் இவை உழைக்கும் காலமளவுக்கு பிளாஸ்டிக்



**‘ இன்றுள்ள எமது வீடுகளை நாம் ஒரு சிறு ஆய்வுக்கு உட்படுத்தினால் எமக்கே பெரிய அதிர்ச்சியாகத்தான் இருக்கும். காரணம் நாங்கள் எதை வாங்க வேண்டும் என்பதை நாங்கள் தீர்மானிப்பதில்லை. அதை கோப்ரேட் கம்பனிகள்தான் தீர்மானிக்கின்றன. எமக்குத் தேவையோ இல்லையோ ஒரு பொருளைத் தொலைக்காட்சி விளம்பரத்தில் பார்த்து விட்டால். அதை வாங்கும் வரை மனம் ஒரு நிலையில் இருக்காது ’**



பொருட்கள் உழைக்காது உழைப்பதில்லை என்பது எனது அனுபவம். மேற்குறித்த பொருட்களை இன்னும் சந்தைகளில் காண்கிறோம். என்றாலும் ஓர் அலட்சியத்தோடு அவற்றைக் கடந்து செல்கிறோம். அவ்வளவதான். இவற்றில் பல பனை ஓலைகளில் பின்னப்படுகின்றன. பல ‘பன்’ புற்களால் இழைக்கப்படுகின்றன. சில சம்புப் புல்லிலும் தயாராகின்றன.

அடுக்களைக்குள் சமைக்க தொடங்கும் ஒரு பெண் அஞ்சறைப்பெட்டியையும் அடுக்குப் பெட்டியையும் மட்டும் கையில் எடுத்துக் கொண்டு உட்காரலாம். அடுப்புக் கூட நிலத்தில்தான். அடுக்குப்பெட்டியின் முதல் தட்டில் கடுகு சீரகம். இரண்டாவது வெந்தயம், முன்றாவது மிளகு நற்சீரகம், நான்காவது தட்டில் மல்லி, ஐந்தாவது அதாவது அடியிலுள்ள பெட்டியில் பச்சை மிளகாய் வெங்காயம் இருக்கும். அடிக்கடி பேணி தேடி மினைக்கெடலில்லாமல் சமையல் நடக்கும். அஞ்சறைப் பெட்டி, இதில் மஞ்சள், இஞ்சி பூடு செத்தல், சுக்கு. எலம் கராம்பு கறுவா போட்ட சிறு டப்பா.. இவ்வளவுதான். அடிக்கடி எழுந்து எழுந்து உட்காராமல் இந்த இரண்டு பெட்டிகளையும் வைத்துக் கொண்டு சமையலை முடித்து விடலாமே. சீனி தேயிலை போன்றவை மட்டும் பழைய கார்லிக்ஸ் போத்தல்களில் குடியேறும். தேயிலை பொயிலை மிளகாய்த்தூள் என்பவைகளை வைத்திருக்கும் டப்பாக்களின் மூடி விரைவில் இற்றுப் போய்விடும். எனவே அடிக்கடி மூடி மாற்ற வேண்டியதாகும். அதனால் மூடியின் உட்புறமாக ஒரு கடுதாசியை வைத்து மூடுவதுண்டு.

ஏனைய பொருட்களுக்கான பெட்டிகள் வயலுக்குச் சாப்பாடு கொண்டு போக ஒரு கடகம், மட்டைகட்டியது. சோற்றை அதில் போட்டு வாழையிலையால் மூடி ஒரு பழைய வேட்டித்துண்டினால் கட்டி தலையில் தூக்கி வைத்து குழம்பு வகைகளை ஒரு சிறு கலயங்களில் ஊற்றி அதன் கழுத்தில் வட்டத்தளை போட்டு அதை கையில் தூக்கிக் கொள்வோம். வயலில் சாப்பிடும் அந்த உணவின் சுவையை விபரிக்கவே இயலாது. சுவைகளின் உச்சம் அதுதான். இந்தக் கடகம் வேலை முடிய கழுவிக்காயவைத்து அடுப்புக்கு நேரே உள்ள பரணில் போட்டு வைத்தால் அது மூன்று நான்கு வருடங்களுக்கு பாவனையில் இருக்கும். அதன்பின்னும் அதிகமாக பிய்ந்து விடும் அதன் மூலையை, மாரி காலத்தில் உட்கார்ந்து அதேயளவு ஓலையை வார்ந்து பொத்துவோம்.

பொத்திய பெட்டி மேலும் இரண்டு வருடங்களுக்கு உழைக்கும். ‘ஓ அதென்ன மாரிகாலமா? பனையோலையில் பெரும்பாலும் வேலை செய்வது மாரிகாலத்தில் தான். காரணம் வெய்யிலுக்கு ஓலை முறிந்து விடும். அவசியம் செய்யத்தான் வேண்டு மென்றால் ஓலையை நனைத்து இளக வைத்துப் பின்னுவோம். எங்களுக்கு பாடசாலையில் ஒரு பாடமாக பன்ன வேலை இருக்கும். அங்கே பழகுவதுதான் வீட்டில் செல்லும். என் அக்கா என்னைவிட இரண்டு வகுப்பு மேல் படித்தாள். அவளுக்கு சுளகு பின்னத்தெரியும். எனக்கு அது தெரியாது. நான் அந்த வகுப்புக்கு போன போது பன்னவேலை என்ற பாடமே நின்று விட்டது.

சொன்னால் நம்புங்கள் இதெல்லாம் வேலை செய்ய முடியாமல் வீடுகளில் முடங்கிக் கிடக்கும் மாரிகாலங்களில், ஒவ்வொரு வீட்டிலும் நடக்கும் குடிசைக் கைத்தொழில்தான். எங்களுக்குத் தேவையான சகல பெட்டிகளையும் நாங்களே பின்னி வைப்போம். ஏன் அம்மா எங்களுக்கு பின்னே நின்று பின்னத் தெரியாத என் தங்கை தம்பிகளை வைத்து அவற்றை பொத்துகிற வேலையைச் செய்விப்பாள்.

இதை எழுதும் போது எனக்கு சிரிப்பு வருகிறது. இப்போது முடியுமா? அந்த நேரத்தைத்தான் தொலைக்காட்சிகளும் செல்பேசிகளும் கொள்ளையடித்து விடுமே. நாங்களும் சும்மாயில்லை. எங்கள் பாட்டியையும் அம்மாவையும் துளைத்தெடுத்து கதை கேட்போம். இதில் புராணக் கதைகள் மட்டுமல்ல. அவர்களுடைய சிறுவயது வாழ்க்கைக் கதைகளும் வரும். எவ்வளவு சுகமான வாழ்க்கை அவர்களுடையது. பின்னே நாலு ரூபாவுக்கு ஒரு மூடை நெல்லென்றால் புதுமைதானே.

ஓலையில் பாய்களை இழைத்தாலும் அதில் படுப்பது கிடையாது. அவை ஏதாவது பொருட்களை காய வைக்கத்தான் பயன்படும். அதுவும் நிழலில். வெய்யிலில் போட்டெடுப்பதாயின் அதை பெரியவர்களே கையாளுவார்கள். எங்களுக்கு தேவையாக பல தொழில்களுக்கும் பாய் தேவை அதை பின்னர் பார்க்கலாம்.

எமது அயல் கிராமத்தில் சிங்களப் பெண்கள் குளங்களில் பன்புல் சேகரித்து அதில் பாய்களும் தட்டுப்பெட்டிகளும் இழைத்து விற்பதற்காக கொண்டு வருவார்கள். கல்பன் எனப்படும் புல்வகை அருமையான பாய்கள் படுத்தால் கண்கள் தாமாகவே சொருகிக் கொள்ளும் அவ்வளவு மென்மையும் சுகமும் அதில் உண்டு. கல்பன் புல் எல்லா இடங்களிலும் கிடைக்காது என்றாலும் அவர்கள் அதை கிடைக்கும் இடங்களிலிருந்து கொண்டு வந்து தமது குளங்களில முளைக்க செய்திருப்பார்கள். சம்புப்புல் தானாக மண்டியிருக்கும் நீர்க்கரைகளில் இப்போது தீ வைத்து அழிக்கப்படுகிறது. கோரைப்பாய் இன்னொரு ரகம் கோரைப்புல்லின் பூத்த தண்டுகளே பாயிழைக்க சேகரிக்கப்படுகின்றன. இவை தறிகளில் பின்னப்படுகின்றன. எமது மக்களில் அநேகர் இதை தமது வாழ்வாதார தொழி லாக செய்கிறார்கள்.

பன்ன வேலைக்கென பரவலாக பயிற்சிக்கூடங்கள் நடாத்தப்படுகின்றன. அங்கிருந்து அருமையான கலைப்படைப்புகளும் வெளி வருகின்றன. இது இப்படி சொல்லி முடிக்க வேண்டிய கதையுமல்ல. இன்னும் அதிகம் பேசலாம்.



## நேர்கண்டவர் - ஞா.கவினி



“மிகச் சிறிய வாய்ப்புக்களே எனக்காக இருந்தன. அதனால் ஒவ்வொரு இடங்களிலும் எனக்கான வாய்ப்புக் களைத் தேட வேண்டிய நிரப்பந்தமும் என்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயமும் எனக்கு ஏற்பட்டது. அந்த நேரங்களில் தான் எனக்குக் கிடைத்த மேடைகளை நான் சரியாகப் பயன்படுத்திக் கொண்டேன்.”

# வாய்ப்புகளை நாங்கள்தான் உருவாக்க வேண்டும்

## ருத்ரா அக்கடமி நிறுவுனர் அனோஜா

நமது தொன்மைகளை ஆற்றுகை மூலம் உலகிற்கு அறியப்படுத்தும் பெரும் தூர நோக்குடன் சிறகு விதித்திருக்கும் ருத்ரா அக்கடமியின் நிறுவுநர் நெறியாளர் செல்வி ஆனந்தன் அனோஜா. இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சுவாமி விவேகானந்தா அழகிய கற்கைகள் நிறுவகத்தின் மூன்றாம் வருட மாணவி.

கலைகள் மீதான பேரார்வமும் விடாமுயற்சியும் இன்று பல வெற்றிகளுக்கு சொந்தக் காரியாக இவரை மாற்றி இருக்கிறது. விபுலானந்த அழகிய கற்கைநிறுவகத்தில் நடனத்தைப் பயின்று வரும் இவர் உலகில் போற்றப்படும் போர் பயிற்சிகளில் ஒன்றான கராத்தேயிலும் தேர்ச்சி பெற்று கறுப்பு பட்டியில் ஜொலிக்கின்றார். வாழ்க்கையை வெல்வதற்கு கலைகளும் கை கொடுக்கும் என்கிறார் அனோஜா.

### ஆர்வமும் தேடலும்

ஆறு வயதில் நுண்கலை கல்லூரியில் எனது கலைப் பயணத்தை ஆரம்பித்தேன். அப்போதிருந்தே கல்வியோடு கலைகளிலும் எனக்கு தீராத காதல் இருந்தது. சிறு வயதிலேயே பாடசாலை நிகழ்வுகளில் மிக விருப்பத்துடன் பங்கு பற்றுவேன். அதற்கான ஒத்திகையில் எனது அம்மாவும் தம்பியும் பார்வையாளர்களாக இருப்பர். எனது வீட்டு கதிரையை மேடையாகவும் நானே சிறந்த ஆற்றுகையை தருபவர் எனவும் என்னை கற்பனை செய்து கொள்வேன். அந்தச் சிறு வயதில் எனது தாயார் எனக்குத் தந்த ஊக்கமும் உற்சாகமும் தான் இன்றும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவதற்கு வழி காட்டுகிறது என்று நம்புகிறேன்.

பிள்ளைப்பராயம் ஒவ்வொரு குழந்தைக்கும் மிகவும் அற்புதமான ஒரு காலம். திரும்பப் பெற முடியாத அந்தக் காலத்தில் உங்களால் முடியும் என்ற நம்பிக்கையை எமக்குள் விதைப்பவர்கள் தான் கடைசி வரைக்கும் எங்கள் கைகளை பிடித்து நடக்கின்ற கடவுளர்கள் ஆகின்றனர். எனக்கு இருந்த ஆர்வத்தோடு இன்னும் எப்படி எதைக் கற்றுக் கொள்ளலாம் என்கின்ற தேடலும் அதிகமாக இருந்தது. எனக்குள் இருந்த ஆர்வத்திற்கு விதை போட்டவர்களை நான் மனதார நினைத்துக் கொள்கிறேன்.

### வாய்ப்புக்களும் களமும்

வாய்ப்புகளை நாங்கள் தான் உருவாக்க வேண்டும்.

மிகச் சிறிய வாய்ப்புகளே எனக்காக இருந்தன. அதனால் ஒவ்வொரு இடத்திலும் எனக்கான வாய்ப்புகளைத் தேட வேண்டிய நிரப்பந்தமும் என்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயமும் எனக்கு ஏற்பட்டது. அந்த நேரங்களில் தான் எனக்கு கிடைத்த மேடைகளை நான் சரியாக பயன்படுத்திக் கொண்டேன். மிகச் சரியாக என்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு மேடைகளை நாங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அங்கே எங்களது திறமைகளை நிரூபித்து எங்களை நிலை நிறுத்திக் கொள்ளவேண்டும். கண்டுகொள்ளப்படாமல் இருந்த இடங்களில் எங்கள் ஆற்றுகைகள் எங்களை அடையாளப்படுத்தி இருக்கின்றன.

அண்மையிலும் கூட வல்வெட்டித்துறையில் வருடா வருடம் மிகக் கோலாகலமாக கொண்டாடப்படும் இந்திர விழாவில் 2023 இந்த வருடம் எங்






களை நிரூபிக்க எங்களுக்கு ஓர் அருமையான சந்தர்ப்பம் கிடைத்தது. அதை எங்களுக்கு கிடைத்த மிகப்பெரும் வாய்ப்பாக நான் கருதுகிறேன். ஏனென்றால் எங்கள் தொன்மைகளை நாங்கள் பேச வேண்டும். எங்கள் பாரம்பரியங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்பது எனது அவா. இந்திர விழாவில் எனது



நெறியாள்கையில் எமது ருத்ரா அக்கடமி மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட நடனம் பல இடங்களில் பேசப்பட்டிருக்கிறது என்பது குழுவினராகிய எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கிறது.

### ருத்ரா அக்கடமி இது எனது கனவு...

ஆரம்பத்தில் நான் கலா ஷேத்ரா கலையகத்தினருடன் ஆற்றுகைகளை நிகழ்த்தியிருக்கிறேன். அப்பொழுது இருந்து சரியான களம் கிடைக்காத மாணவிகளுக்கு நான் வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் புரையோடிப் போயிருந்தது. அதன் வெளிப்பாடாகத்தான் தற்போது உதயம் ஆகி இருக்கிறது இந்த ருத்ரா அக்கடமி.

ருத்ரா என்கிற இறை நாமத்தை தாங்கிய எமது குழு எதிர்காலத்தில் மிகச் சிறந்த ஆற்றுகை குழுவாக தம்மை வெளிப்படுத்துவர் என்பதில் அசராத நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### கராத்தே + நடனம்

கராத்தே நடனம் இரண்டும் வெவ்வேறு உணர்வுகளை தரக்கூடியன. ஆனால் இவை இரண்டும் எனக்கு இரு கண்களை போன்றன. நடனத்தை நிகழ்த்தும் போது அந்த பாத்திரம் சார்ந்து அத்தனை நளினங்களையும் என்னால் நிகழ்த்த முடிகிறது. அதேபோலத்தான் கராத்தே யிலும் என்னை ஒரு வீராங்கனையாக உருவகித்து போட்டியிடுவதற்கு முடிகிறது. இது உண்மையில் கொஞ்சம் சிக்கலான விடயம்தான். ஆனால் எனக்கு இது மிகவும் சுலபமாக இருக்கிறது. ஏனென்றால் நான் எடுத்துக்கொள்கின்ற பாத்திரத்தை இயல்பாகவே எனக்குள் ஏற்றுக் கொள்ள பழகி இருக்கிறேன். ஒவ்வொரு பாத்திரதை







ஆற்றுகைப்படுத்தும் போது அந்த பாத்திரமாகவே மாறி விடுகிறேன். அதனால் எனக்கு இது பெரிதாக எந்த அசௌகரியங்களையும் கொடுப்பதில்லை. மாறாக மிகவும் மன மகிழ்ச்சியை கொடுக்கிறது.

### எதிர்கால திட்டம்

இந்தியாவிற்குச் சென்று எம்.ஏ. படிக்க வேண்டும் என்பது எனது திட்டம். காலம் கைகூடி எனக்கு வழி விடுமானால் நான் எனது உயர்கல்வியை முடித்து ஒரு சிறந்த நடன பேராசிரியராக பலரது வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இப்போது என்னால் எனது பொருளாதார நிலையையும் சீர் செய்து கொள்ள முடியும். முதலாவது எப்போதும் எங்களுக்காக வாழும் எனது அம்மாவிற்கான அத்தனை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறுவயதிலிருந்தே தாயாகவும் தந்தையாகவும் இருந்து என்னையும் தம்பியையும் ஆளுமை உள்ளவர்களாக வளர்த்தெடுத்த அம்மாவிற்கு எப்போதும் என் வாழ்க்கையில் முதல் இடத்தை கொடுக்க விரும்புகிறேன்.

ஆசைகள் குறிக்கோள்கள் என்று பெரிதாக எதுவும் இல்லாது விட்டாலும் சாதிக்க வேண்டும், நாங்களும் எதையாவது சாதித்து விட வேண்டுமே என்கின்ற அந்த எண்ணத்தை எங்களுக்குள் விதைத்தது நாங்கள் அவமானங்களை சந்தித்த அந்த நாட்கள் தான். அவைகளை கடந்து வருவதற்கு எப்போதும் தன்னம்பிக்கை தான் நமக்கு மூலாதாரமாக இருந்திருக்கிறது அதனை சிறுபராயத்தில் இருந்தே நமக்குள் ஊட்டி வளர்த்தவர் நமது அம்மா. ஆக எனது லட்சியம், குறிக்கோள் எதிர்காலத் திட்டம் என எல்லாமே இதனை சுற்றி தான் இருக்கிறது. எனது உயர்கல்விக்கு பிறகு மிகச் சிறந்த சில விடயங்களை செய்ய வேண்டும் என்று இருக்கிறேன். காலம் கைகூடும் என்று நம்புகிறேன். தடைக்கற்கள் யாவற்றையும் படிக்கற்கள் ஆக்குவது தானே வாழ்க்கை.

நமது பொருளாதாரத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்கும், மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்திக் கொள்வதற்கும் கலைத்துறை இன்றியமையாததாக இருக்கின்றது.

“கலைகள் தொன்மையானவைகளை எப்போதும் உயிர்ப்புடன் வைத்திருக்கும்” என்கிறார் ருத்ரா அகாடமி நிறுவுனர் ஆனந்தன் அனோஜா.





ஆனந்தன்
பிரேம்நாந்
லக்சி பண்ணை

"அனைத்து மண் வகைகளிலும் மாதுளை வளரக்கூடிய பயிராக இருந்தாலும் செம்மண் மற்றும் இருவாட்டி மண்ணில் தான் அதிக விளைச்சலை கொடுக்கும். மாதுளைக்கு நுண்ணூட்ட சத்துக்கள் சற்று கூடுதலாக தேவைப்படும்"

# இயற்கை முறையில் மாதுளை பயிர் செய்வது எப்படி?

வறட்சியை தாங்கி வளரக்கூடிய பழ பயிர்களில் முதன்மையானது மாதுளை.

மாதுளை ஆனது எமது உடலுக்கு எண்ணற்ற நன்மைகளை கொடுக்கக் கூடியதும், அதிகமானோரால் சலிப்புத் தன்மை இல்லாமல் விரும்பி உண்ணக் கூடியதும், சற்று விலை கூடியதும், அனைத்து மண் வகைகளிலும் வளரக் கூடிய குற்றுமர வகைகளில் ஒன்றாகும்.

அனைத்து மண் வகைகளிலும் மாதுளை வளரக்கூடிய பயிராக இருந் தாலும் செம்மண் மற்றும் இருவாட்டி மண்ணில் தான் அதிக விளைச்சலை கொடுக்கும். மாதுளைக்கு நுண்ணூட்ட சத்துக்கள் சற்று கூடுதலாக தேவைப்ப டும்.

மண்ணில் நுண்ணுயூட்ட சத்துக் கள் குறையும் பட்சத்தில் பூ உதிர்தல், பிஞ்சுகள் உதிர்தல், சிறிய காய் பருவத் தில் காய்கள் வெடித்து முத்துக்கள் வெளியே தெரிதல் போன்ற பிரச்சினை கள் ஏற்படும்.

ஒரு சில பண்ணையாளர்களுக்கு மாதுளை பயிர்செய்கை தோல்வியில் முடிவதற்கான 95 வீத காரணம் நுண் ணூட்டச் சத்து குறைபாடு மட்டுமே.

ஆகையால் மாதுளை பயிரிடுவதற்கு முன்பு பயிரிட உத்தேசித்துள்ள நிலத் தில் மண் மாதிரிகளை வெட்டி எடுத்து மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஊடாகவோ அல்லது பல்கலைக்கழகத் தின் ஊடாகவோ பரிசோதனை செய்து, அதன் PH பெறுமானத்தினை அறிந்த பின்பே அம்மண்ணில் மாதுளை பயிரிட வேண்டும்.

சாதாரணமாக மண்ணின் கார அமி லத்தன்மை நடுநிலையாக அதாவது 6 - 7 வரை இருக்க வேண்டும்.

பல நாடுகளிலும் பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பழ பயிர்களில் மாதுளை யும் ஒன்றாகும்.

ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அதிக அளவில் மாதுளை உற்பத்தி செய்யப்படு



கின்றது. இந்தியாவில் ஒரு கிலோ மாதுளம் பழத்தின் விலை சாதாரணமாக 300 ரூபாய்.

ஆனால் இலங்கையில் சில நாட்க ளுக்கு முன்பு ஒரு கிலோ மாதுளம் பழத்தின் விலை இலங்கை ரூபாயில் 4000 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

மாதுளையில் பல ரகங்கள் உள்ளன. இவற்றில் முத்துக்கள் அடர் சிவப்பு நிறத் தில் உள்ள ரெட் ஏஞ்சல் போன்ற இரகங் கள் பிரபலமானவை. அதோடு ருத்ரா, நிமாலி, தயா,நயான மற்றும் பக்வா முத லிய ரகங்களும் பிரபலமானவை.

நடவு செய்யும்பொழுது செடிக்கு செடி இடைவெளி குறைந்தது முதல் 10 - 12 அடி வரை இருக்கவேண்டும். ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட வயதுடைய பதியன் குச்சிகளை நடவு செய்யலாம். விதைகளில் உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளை. நடுகை செய்வதை தவிர்த்து வீரிய ஒட்டு ரக கன்றுகளை தேர்வு செய்து நட வேண்டும்.

அப்போதுதான் விரைவாக காய்க் கக்கூடியதும். அதிகளவில் காய்க்கக் கூடியதுமாக இருக்கும்.

கன்றுகளை நடுவதற்கு குழி தோண்டும்போது கட்டாயம் குறைந்தது 1 - 1 - 1 (அடி ) என்ற அளவில் குழிகள் எடுத்து நடவு செய்வது சிறந்தது. தயார் செய்த குழியில், நுன்னுயிர் உரம் கலந்த மண்புழு உரத்துடன். வேப்பம் புண்ணாக்கு மற்றும் சிறிது சுண் ணாம்பு தூள் கலந்து. பதியம் வைத்த குச்சியை அல்லது ஒட்டுக்கட்டிய கன்று களை நடவேண்டும்.

மண் தன்மைக்குஏற்ப தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

மாதுளை துளிர்கள் வளரும் போது



அனைத்தையும் வளரவிடாமல் குறிப்பாக இரண்டு மற்றும் மூன்று துளிர் மட்டும் விட்டு மீதி துளிர் விட்டு வரும் கிளைகளை கவ்வாத்து செய்வதால் வளர்ச்சி வேகமாக இருக்கும்.

அதோடு துளிர் விட்டு வளரும் சந்தர்ப்பங்களில் இயற்கை பயிர் வளர்ப்பு ஊக்கியான மீன் அமினோ அமிலம், பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், போன்றவற்றை வாரத்தில் ஒரு தடவை தெளித்து வந்தால் இலைகள் அடர் பச்சை நிறமாகவும் துளிர்கள் கருகாமலும் இருக்கும்.

விதைகளில் உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளாக இருந்தால் ஐந்து வருட முடிவில் பூ பிடிக்க ஆரம்பிக்கும். பதியம் வைத்த ஒட்டுக்கன்றுகளை நடவு செய்தால் மூன்றாவது ஆண்டு இறுதியில் பூக்க ஆரம்பிக்கும். பூக்கள் உதிராமல் தடுக்க மொட்டுகள் ஆரம்பிக்கும் போது சத்துக்கள் மற்றும் ஈரப்பதம் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும்.

அதாவது இயற்கை முறையில் பூக்கள் உதிர்வதை கட்டுப்படுத்துவதாக இருந்தால். மொட்டுக்கள் பிடிக்க ஆரம்பித்த நாளிலிருந்து வாரத்திற்கு இரண்டு தடவை தேமோர் கரைசலை உற்பத்தி செய்து மாலை வேளையில் தெளித்து வந்தால் பெரும்பாலும் பூக்கள் உதிர்வது கட்டுப்படும்.

பூக்கள் காய்களாக மாற ஆரம்பிக்கும் சந்தர்ப்பங்களில் அணில்கள், வவ்வால் போன்ற பிராணிகளிலிருந்து பாதுகாப்பதற்காக காற்றோட்டம் உள்ள சிறிய வெள்ளை துணியால் சுற்றி கட்டி விட வேண்டும். மேற்கூறிய பிராணிகளின் தொல்லை இல்லாத பட்சத்தில் துணிகளால் சுற்றி கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

நான்கு மாதம் கழித்துதான் பழுக்க ஆரம்பிக்கும். நல்ல கவர்ச்சியான நிறம் உடைய பழங்கள் தேவை என்றால் மேம்படுத்தப்பட்ட அமிர்த கரைசலை அல்லது திராட்சை கரைசலை காய்கள் முற்ற ஆரம்பிக்கும் போதே செடிகள் மீது வாரத்திற்கு ஒரு தடவை தெளிக்க வேண்டும்.



அறுவடை செய்யப்படும் பழங்களை 27 பாகை செல்சியஸ் வெப்ப நிலைக்கு குறைவான இடங்களில் பதப்படுத்தி பகுதி பகுதியாக சந்தைப்படுத்தலை மேற்கொள்ளலாம். அறுவடை செய்யப்பட்ட பழங்கள் மீது வெயில் படுவது அதிகமாக இருந்தால் பழங்களின் தோல் பகுதி வாடிய தோற்றத்திற்கு மாற ஆரம்பிக்கும்.

அதோடு அறுவடை செய்யப்பட்ட பழங்களை பொலித்தீன் பைகளிலும் சுத்தி வைக்கக் கூடாது காரணம் பழங்களின் தோற்றம் முற்றாக மாறிவிடும். முதலாவது மற்றும் இரண்டாவது அறுவடையில் சற்று விளைச்சல் குறைவாக இருக்கும். மூன்றாவது அறுவடைக்கு பின்பே விளைச்சல் அதிகரித்துக் கொண்டு செல்லும். சாதாரணமாக அறுவடை செய்யப்பட்ட ஒரு பழத்தின் நிறை 250 கிராமுக்கும் அதிகமாக இருந்தால் அது சிறந்த விளைச்சல் ஆக கருதப்படும்.



மாதுளையை அதிகமாக தாக்கும் நோய்கள் சாறு உறிஞ்சும் பூச்சி மற்றும் பழ ஈக்கள் ஆகும். இவற்றை நாங்கள் முற்று முழுதாக இயற்கை முறையில் கட்டுப்படுத்த இயற்கை கிருமி நாசினிகளான அக்கினி அஸ்திரா அல்லது கற்பூரகரைசலை பூக்கள் தோன்ற ஆரம்பித்த போது தெளித்தால். அனைத்து நோய்களையும் முற்றிலும் தடுக்கலாம்.

மேற்குறிப்பிட்ட இயற்கை கிருமி நாசினிகளை. மொட்டுகளாக இருக்கும்போதே தெளிக்க வேண்டும் அல்லது பூக்கள் காயாக மாறும் பருவத்தில் தெளிக்க வேண்டும். மாறாக பூக்களாக இருக்கும் பருவத்தில் தெளிக்க கூடாது. இது இயற்கை கிருமி நாசினிகளுக்கு மட்டுமல்ல. இரசாயன கிருமி நாசினிகளையும் இவ்வாறே பயன்படுத்த வேண்டும்.

மாதுளை வருடத்தில் மூன்று முறை மட்டுமே காய்க்கும். வெயில் அதிகம் உள்ள காலங்களில் காய்களுக்கு நேரடியாக சூரிய ஒளி படும் பட்சத்தில் காய்களின் ஒரு பகுதியில் கருக ஆரம்பிக்கும் ஆகையால் அச்சந்தர்ப்பத்தில் நன்கு காற்றோட்டம் உள்ள நெட் துணிகளைக் கொண்டு சுற்றிவிடலாம்.

அதிகளவில் மாதுளை பயிர் செய்யப்படும் பண்ணைகளில் ரசாயனம் கலந்த பயிர் வளர்ப்பு ஊக்கிகளை வேரின் ஊடாக கொடுக்கின்றார்கள். இதனால்தான் காய்கள் திரட்சியாகவும். பழங்கள் அழகாகவும் தோன்றுகின்றது. ஆனால் நாங்கள் இதனை இயற்கையான

மேம்படுத்தப்பட்ட அமிர்த கரைசலை வேரின் ஊடாக அளிப்பதன் மூலம் கரும் பச்சை நிற இலைகள் தோன்றும். திரட்சியான மற்றும் சுவையான பழங்கள் கிடைக்கும். மாதத்திற்கு ஒரு தடவை அமிர்த கரைசலோடு மண்புழு உரம் கலந்து மரத்தின் அடிப்பகுதியில் இடலாம்.

மாதுளையில் காய்ப்பு முடிந்தவுடன் கிளைகளில் நுனிப்பகுதிகளை நிச்சயம் கவ்வாத்து செய்ய வேண்டும். செடிகளின் அடி பகுதியில் நிலத்திலிருந்து மூன்று அடி உயரம் வரை தோன்றும் துளிர்களை வெட்டி விடவேண்டும். அதிக அளவில் மாதுளை உற்பத்தி செய்யும் பண்ணையாளர்கள் சந்தை வாய்ப்பினை பற்றி ஐயம் கொள்ளத் தேவையில்லை அதாவது ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு மா விற்கு அடுத்த படியாக மாதுளைக்கு உண்டு.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி 0770239784**
**வாட்ஸ்ஆப் 0769196445**

# வட, கிழக்கில் ஜம்போ நிலக்கடலை வெற்றிகரமாகச் செய்தல் சாத்தியமா?



இலங்கை 2021 ஆம் ஆண்டில் 64,000 மெட்ரிக் தொன் அறுவடையுடன் நிலக்கடலை உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளதாக விவசாயத் திணைக் களம் அறிவித்து இருந்தது. இது நாட்டின் வருடாந்த தேவையான 30,000 மெட்ரிக் தொன்களை இரட்டிப்பாக்கியுள்ளதுடன் அதிக விளைச்சல் தரும் வகையான லங்கா ஜம்போவினால் இலங்கையின் சில பகுதிகளில் செய்கைகள் விரிவுபடுத் தப்படுகின்றன. இது இறக்குமதியைக் குறைக்க அறிமுகப்படுத்தப்பட்டது எனவும் அறிவிக் கப்பட்டது.

ஜம்போ நிலக்கடலை விதை உற்பத் தியை ஊக்குவிக்கவும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உலக வங்கியின் உதவியுடன் விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இவை விவசாய விரி வாக்கலின் விவசாய போதனாசிரியர்கள் ஊடாகவும் விவசாயத் துறை நவீனமய மாக்கல் திட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக வும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருந் தது. மத்திய விவசாயத் துறையின் விதைச் சான்றளிக்கும் திணைக்களம் பயிர்ச்செய்கை காலத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் களப் பார்வைகள் மேற்கொண் டிருந்தது.

இலங்கையில் சில விவசாயிகள் நெல் பயிரிடுவதை விட ஜம்போ நிலக்கடலை பயிரிட விரும்புவதற்கு பல காரணங்கள் உள்ளன.



அதிக லாபம்: நெல் செய்கையுடன் ஒப்பிடும்போது ஜம்போ நிலக்கடலை அதிக லாபம் தரக்கூடியது.

குறைந்த தொழிலாளர் தேவைகள்: நெல் செய்கையுடன் ஒப்பிடும்போது ஜம்போ நிலக்கடலைக்கு குறைவான உழைப்பு தேவைப்படுகிறது, இது குறைந்த உழைப்பு வளங்களைக் கொண்ட விவசாயிகளுக்கு குறிப்பிடத்தக்க நன்மையாக இருக்கும்.

குறைந்த நீர் தேவை: நெல் செய்கை யுடன் ஒப்பிடும்போது ஜம்போ நிலக்கட லைக்கு குறைந்த நீர் தேவைப்படுகிறது, இது குறைந்த நீர் ஆதாரம் உள்ள பகுதி களில் ஒரு நன்மையாக இருக்கும்.

குறைந்த ஆபத்து: நெல் செய்கையுடன் ஒப்பிடும்போது ஜம்போ நிலக்கடலை ஆபத்து குறைவு, இது வானிலை மற்றும் நீர் இருப்பை மிகவும் சார்ந்துள்ளது. ஜம்போ நிலக்கடலையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் குறைவாகவே உள் ளன.

வருமானத்தைப் பன்முகப்படுத்துதல்: சில விவசாயிகள் தங்கள் வருமான வழி களைப் பன்முகப்படுத்தவும், ஒரே பயிரை சார்ந்திருப்பதைக் குறைக்கவும் ஒரு வழி யாக ஜம்போ நிலக்கடலையைத் தேர்வு



செய்யலாம்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஜம்போ நிலக்கடலை செய்கை யில் உள்ள சவால்கள் எவை?

நீர்ப்பாசன வசதிகள் இல்லாமை: நாட் டின் தென்மேற்குப் பகுதிகளில் பெய்து வரும் பருவ மழை காரணமாக இலங்கை யின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங் கள் நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள் கின்றன. விவசாயிகளுக்கு, குறிப்பாக வறட்சியான காலங்களில் பாசனம் பெரும் சவாலாக உள்ளது.

மண்ணின் உப்புத்தன்மை: வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களின் சில பகுதிகளில், நிலத்தடி நீர் உப்புத்தன்மை மற்றும் அதிகமான பாசன நீரின் பயன்பாடு காரணமாக மண்ணின் உப்புத்தன்மை ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. இது பயிர் வளர்ச்சி மற்றும் விளைச்சலை பாதிக்கும்.

பூச்சி மற்றும் நோய்: நிலக்கடலை பல் வேறு பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு ஆளாகிறது, இது குறிப்பிடத்தக்க இழப்பை ஏற்படுத்தும். எவ்வாறாயினும், இலங்கை



யின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் உள்ள விவசாயிகளுக்குப் பயனுள்ள பூச்சி மற்றும் நோய் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கு அணுகல் உள்ளது.

அறுவடைக்குப் பிந்திய இழப்புகள்: நிலக்கடலை அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புக்கள், மோசமான அறுவடை நடைமுறைகள், முறையான சேமிப்பு வசதிகள் இல்லாமை, மற்றும் போதிய போக்குவரத்து உள்கட்டமைப்பு ஆகிய வற்றால் ஏற்படும்.

காலநிலை மாற்றம்: காலநிலை மாற்றத்தின் விளைவுகள், கணிக்க முடியாத மழைப்பொழிவு மற்றும் அதிகரித்த வெப்பநிலை போன்றவை, இந்தப் பகுதிகளில் நிலக்கடலை மிகவும் சவாலானதாக மாறும்.

விவசாய விரிவாக்கச் சேவைகள் இல்லாமை: இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் உள்ள விவசாயிகள் விவசாய விரிவாக்க சேவை



களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைக் கொண்டிருக்கலாம், இது அவர்களின் விவசாய நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களைப் பெறுவதற்கு அவர்களுக்கு கடினமாக இருக்கலாம்.

தொழிலாளர் பற்றாக்குறை: சமீப



ஆண்டுகளில், இலங்கையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் தங்கள் பயிர்களை பயிரிட தேவையான ஆட்களை தேட முடியாமல் சிரமப்படுகின்றனர்.

உள்கட்டமைப்பு சவால்கள்: இந்தப் பகுதிகளில் போக்குவரத்து உள்கட்டமைப்பு போதுமானதாக இல்லை, இதனால் விவசாயிகள் தங்கள் பயிர்களை சந்தைகளுக்குக் கொண்டு செல்வதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும், சேமிப்பு வசதிகள் இல்லாததால் அறுவடைக்குப் பின் இழப்பு ஏற்படும்.

இந்த சவால்களை எதிர்கொள்வதற்கு, அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் அமைப்புகளின் ஒத்துழைப்பை உள்ளடக்கிய பன்முக அணுகுமுறை தேவைப்படும். மேலும் இந்தச் சவால்களுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய சிறிய அளவிலான விவசாயிகளின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

ஜம்போ நிலக்கடலை செய்கையின் இலாபம் மண்ணின் நிலை, வானிலை முறைகள், நீர் இருப்பு மற்றும் சந்தை தேவை உள்ளிட்ட பல காரணிகளைப் பொறுத்து மாறுபடும். இந்தக் காரணிகள் சாதகமாகவும், முறையாகவும் நிர்வகிக்கப்பட்டால், ஜம்போ நிலக்கடலை செய்கை லாபகரமான முயற்சியாக இருக்கும்.

இலங்கையின் வடக்குப் பகுதியில், வானிலை பொதுவாக வெப்பமாகவும் வறண்டதாகவும் இருக்கும், இது வேர்க்கடலையை வளர்ப்பதற்கு ஏற்றதாக இருக்கும். எவ்வாறாயினும் - மற்றும் வெற்றிகரமான ஜம்போ நிலக்கடலை செய்கையை உறுதிப்படுத்த உள்கட்டமைப்பு மற்றும் விவசாய தொழில் நுட்பத்தில் குறிப்பிடத்தக்க முதலீடு தேவைப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜம்போ நிலக்கடலை செய்கையை கருத்தில் கொள்வதற்கு முன், மண்ணின் தரம், நீர் இருப்பு, தொழிலாளர் செலவுகள் மற்றும் சந்தை தேவை போன்ற காரணிகளை கணக்கில் எடுத்துக்கொண்டு, லாபத்தை மதிப்பிடுவதற்கு ஒரு முழுமையான ஆய்வு நடத்துவது முக்கியம். உள்ளூர் விவசாய நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசிப்பதன் மூலம் இப்பகுதியில் ஜம்போ நிலக்கடலை செய்கை குறித்த அறிவித்தல்களைப் பெற முடியும்.

ஜம்போ நிலக்கடலை செய்கை குறித்த தகவல்களை பெறக்கூடிய இடங்கள் எவை என்பதையும் பார்ப்போம்.

விவசாயத் திணைக்களம் - நிலக்கடலை உள்ளிட்ட பலதரப்பட்ட பயிர் செய்கை முறைகளில் விவசாயிகளுக்கு ஆதரவு மற்றும் ஆலோசனைகளை வழங்கும் ஓர் அரசு நிறுவனம் ஆகும். பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்த விரிவாக்க சேவைகள் தொழில்நுட்ப உதவி மற்றும் விவசாய உள்ளீடுகளை வழங்குகின்றன. உங்கள் பகுதி விவசாயப்போதனாசிரியரை அணுகுவதன் மூலம் இது பற்றிய தகவல்களை பெற முடியும்.

இலங்கை விவசாய தகவல் சேவையானது இலங்கையில் விவசாயத் துறையில் விவசாயிகள் மற்றும் பங்குதாரர்களுக்கு தகவல் மற்றும் ஆலோசனைகளை வழங்கும் தளமாகும். ஜம்போ வேர்க்கடலை உள்ளிட்ட பல பயிர்கள் தொடர்பான செய்திகள் கட்டுரைகள் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளை இங்கு பெற முடியும்.

ரஜீதன் மகேஸ்வரன் -இலங்கையின் வடமாகாண விவசாயத்முறையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாயப் பட்டதாரியும் இந்திரா குழுமத்தின் தலைவர் ரஜீதன் மகேஸ்வரன் அவர்களை தொடர்பு கொள்வதன் மூலம் அவற்றிற்கான வழிகாட்டுதலையும் ஆவோசனைகளையும் இயந்திரப்பயன்பாட்டினை பற்றியும் அறிந்து கொள்ள முடியும். அவரது தொடர்பு இலக்கம் - +94777906383.


ஜம்போ நிலக்கடலை செய்கை குறித்த தகவலை இணையத்தில் அறிய இலங்கை விவசாயத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் கமத்தொழில் விளக்கத்தினை பார்வையிடுங்கள்.

www.agricultureinformation.lk

> இரவில் மாடுகளை வீதியில் விடாமல் மாட்டுப் பட்டிகளில் அடைப்பதுதான் பொருத்தமானது. இன்றைய காலத்தில் அதிகளவு மாடுகளை வளர்ப்பது சிரமமானது. உணவு இருப்பிட தட்டுப்பாடு வரும். விபத்துக்குக் காரணமாக அமையும். வயல் காலங்களில் ஆட்களை வைத்துப் பார்க்க வேண்டும். களவுகள் அதிகம் நிகழ்கின்றன.



# கால்நடைகளும் விபத்துக்களும்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

சில வாரங்களுக்கு முன்எனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது வீதியின் குறுக்கே நின்ற மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தேன். நல்ல



வேளை முழங்காலில் ஏற்பட்ட சிறிய சிராய்ப்புக் காயத்துடன் தப்பியிருந்தேன். சாதாரணமாக வீதியோரமாக மேய்ந்து கொண்டிருந்த மாடு திடீரென வீதியை குறுக்கறுத்து ஓடியதால் நிலைதடுமாறி பிரேக்கை பிடித்ததால் நான் விழ வேண்டி ஏற்பட்டது. என்னைப்போல் உங்களில் பலர் வீதியில் குறுக்காக ஓடும் மாடுகள், நாய் பூனைகளால் விபத்துக்கு உள்ளாகி யிருப்பீர்கள். காயப் பட்டிருப்பீர்கள். பலர் இறந்தும் இருப்பார்கள். கடந்த சில வாரங் களுக்கு முன் வவுனியாவில் இருபது வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் திடீரென வீதியில் ஓடிய நாயில் மோதி இறந்திருந்தான். வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்திய அவன் திடீரென நாய் குறுக்கே வர அதனைக் காப்பாற்ற பிரேக்கை பிடிக்க நிலைதடுமாறி ஒரு கம்பத்துடன் மோதி இறந்திருக்கிறான். நாய் ஓடித் தப்பிவிட்டது.

மாடுகள் நாய்கள் போன்ற விலங்குக ளின் நகர்வை அனுமானிக்க முடியாது. வீதியை திடீரென குறுக்கறுப்பவை. மாடுகள் தங்களுக்குள் சண்டையிடும். அதுவும் இனச்சேர்க்கை வேட்கையில் உள்ள போது சுற்றியிருக்கும் எதனையும் அவை கருத்திற் கொள்ளாதவை. குறிப்பாக காளைகள் கடுமையாக சண்டையிடும். அதுபோல நாய்கள் கூட்டம் கூட்டமாக வீதிகளில் அலைந்து திரியும். சிலவேளை களில் மாடுகளை, நாய்களை யாரும் துரத் தினால் அச்ச மிகுதியால் வீதியைக் கடக்கும். இதனால் வீதியில் செல்வோர் பாதிப்ப



டைவார்கள்.

மாடு வளர்ப்பில் ஈடுபடும் பலர் தமது மாடுகளை சரிவர பராமரிக்காததன் காரணமா கவே விபத்துக்கள் ஏற்பட கார ணமாக அமைகின்றன. காலை யில் திறந்து இரவில் அடைத்து பராமரிக்கும் வளர்ப்பு முறையில் உள்ள மாடுகள் புற்களை தேடி காடு மேடெல்லாம் திரியும். வீதியோரங்கள் புகையிரத வீதி யோரங்களில் உள்ள புற்களை உண் ணும். இதன்போது ஏற்படும் வெளித் தூண்டல்கள் காரணமாக அவை கலவரம டைந்து விபத்துக்கு உள்ளாகின்றன. வவு னியா தாண்டிக்குளத்தில் இருந்த எனக்கு தெரிந்த ஒரு பண்ணையாளர் தனது

பதினைந்து இருபது மாடுகளை புகையிரதத்துக்கு பலி கொடுத்தவர். புகையிரத வீதி ஓரங்களிலுள்ள புற்களை மேயும் போது திடீரென வரும் புகையிரதத்தால் கலவரமாகி அதனுடன் மோதி இறக்கின்றன. கடைசியில் எஞ்சிய மாடுகளை விற்று விட்டார். புகையிரத வீதிக்கு அருகில் வசிப்போரின் செல்ல நாய் பூனைகள் புகையிரதத்தில் மோதி அங்கவீனமாகி ஆபத்தான நிலையில் என்னிடம் சிகிச்சைக்கு வந்திருக்கின்றன.

பல பண்ணையாளர்கள் மாடுகளை இரவில் கூட கட்டுவதில்லை. அவை வீதியில் படுத்திருக்கும். அதுவும் கூட்டம் கூட்டமாக. சில வீதிகளில் நூற்றுக்கணக்கில் மாடுகள் இரவில் படுத்திருக்கும். வாகனங்களில் செல்வோர் இதனால் சிரமமடைகிறார்கள். சில மாடுகள் ஒலி எழுப்பியும் அசட்டை செய்யாது அப்படியே படுத்திருக்கும். சிலநேரங்களில் பேரூந்துகள், கனரக வாகனங்கள் மோதி பல மாடுகள் காவு கொள்ளப்படும் சம்பவங்களும் அடிக்கடி நிகழ்கின்றன. இதன் போது கால்நடைகளின் உயிரிழப்பு நிகழ்வதோடு வாகன ஓட்டிகளுக்கும் உயிரிழப்புக்கள் காயங்கள் ஏற்படுகின்றன. வாகன சேதங்களும் ஏற்படுகின்றன. இரவில் எருமைகளும் கறுப்பு /கடும் நிறமான மாடுகள் படுத்திருந்தால் அருகில் வரும்வரை தெரியாது.

சில நாய்கள் வீதியில் போகும் வாகனங்களை மனிதர்களை துரத்தும் இயல்புடையன. அவற்றின் ஆரம்பகால உள்ளுணர்வின் (prey predator instinct)





காரணமாக மேற்படி வாகனங்களை மனிதர்களை இரையாக எதிரியாக அனுமானித்து இப்படியாக துரத்துகின்றன. இதனால் பல விபத்துகள் ஏற்படுகின்றன. விலங்குகளும் மனிதர்களும் பாதிக்கப்படும் நிலை தோன்றுகிறது.

பெரும்போக நெற்செய்கைக் காலங்களில் பல உள்ளூராட்சி சபைகள் வீதியில் திரியும் கால்நடைகளை பிடித்து உரிமையாளரிடம் கப்பம் பெறுவார்கள். மேற்படி பயிர் செய்கைக் காலங்களில் கால்நடைப் பண்ணையாளர் மற்றும் விவசாயிகளை அழைத்து இடம்பெறும் கூட்டங்களில் மாடுகளை கட்டி மேய்க்கவும் வயல்களுக்கு வேலி அடைக்கவும் சொல்லப்படும். எனினும் சில வேளைகளில் மாடுகளை மேயும் சந்தர்ப்பம் ஏற்பட அவை கட்டப்பட்டு உரியவரிடம் தண்டம் அறவிடப்படும். சிலர் அத்துமீறும் மாடுகளை வெட்டுவார்கள். இதனால் அந்த நாட்களில் கால்நடை வைத்தியர்களான எங்களுக்கு வேலை வரும். சில மாடுகளுக்கு விழும் வெட்டுக்கள் மீள குணப்படுத்த முடியாதவை. பழைய பகைகள் மாடுகளை வெட்டுவது மூலம் தீர்க்கப்படும்.



இரவில் மாடுகளை வீதியில் விடாமல் மாட்டுப் பட்டிகளில் அடைப்பதுதான் பொருத்தமானது. இன்றைய காலத்தில் அதிகளவு மாடுகளை வளர்ப்பது சிரமமானது. உணவு இருப்பிட தட்டுப்பாடு வரும். விபத்துக்கு காரணமாக அமையும். வயல் காலங்களில் ஆட்களை வைத்து பார்க்க வேண்டும். களவுகள் அதிகம் நிகழ்கின்றன. (தற்போது மாடு வளர்ப்பதை விட களவெடுத்து இறைச்சிக்கு வெட்டுவது இலாபம் என்பது போல பல திருடர்கள் உருவாகியுள்ளனர். பல சம்பவங்களை நாங்கள் தினமும் சந்திக்கிறோம். பல பஞ்சாயத்துக்களுக்கு எங்கள் அறிக்கை தேவை. மாட்டுக் களவு தொடர்பாக இன்னொரு தடவை விலாவரியாக எழுதுகிறேன்). முன்னைய காலம் போல ஆயிரக்கணக்கில் மாடுகளை வைத்திருக்க முடியாது. அதிக உற்பத்தி திறனுடைய சிறிதளவு மாடுகளே பொருத்தம். அதற்காக பொருத்தமில்லாத இடத்துக்கு அதிக உற்பத்தி திறனுடைய மாடுகளை கொண்டுவர வேண்டாம். மாடுகளை குறைத்தால் போதிய உணவு இருப்பிடத்தை வழங்க முடியும். வீணே வீதியில் விடத் தேவை இல்லை.

இரவில் ஒளிரும் வகையான கழுத்துப் பட்டிகளை சிலர் பரிந்துரை செய்கின்றனர். இலங்கையில் இது எந்தளவுக்கு சாத்தியம் என்பது தெரியவில்லை. மாடுகள் இருக்கும் வீதிகளை வாகன ஓட்டிகள் கவனமாக கடக்க வேண்டும். குறிப்பாக மாலை, இரவு வேளைகளில். நாய்கள் அதிகளவில் பெருகியுள்ளன. நாய்களை கட்டுப்படுத்தும் அரச செயற்றிட்டம் சுகாதார அமைச்சில் இருப்பது பொருத்தமற்றது.

கால்நடை வைத்தியர் உள்ள கால்நடை உற்பத்தி திணைக்களத்திடம்தான் போக வேண்டும். விலங்குகள் தொடர்பான நிலையான கால்நடை வைத்திய தொழில்நுட்ப பின்புலம் இல்லாத சுகாதார திணைக்களம் இந்த செயற்றிட்டத்தை நாசமாக்குகிறது. வீதிகளில் கட்டாக்காலி நாய்கள் பெருகியுள்ளன. வளர்ப்பு நாய்களை வீதிகளில் விடுவதை தடுக்க வெளிநாடுகளில் உள்ளதைப் போல சில சட்டங்கள் தேவை. உரிமையாளர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். இப்படியாக ஒருங்கிணைந்த செயற்பாடுகள் செய்யப்படும்போது கால்நடைகளால் ஏனைய விலங்குகளால் நிகழும் விபத்துக்களைத் தவிர்க்க முடியும்.







வேதநாயகம் தபேந்திரன்

# எங்கே போகிறது மனிதம்

அவர்கள் வயதான தம்பதிகள். பிள்ளைகள் நால்வரும் திருமணமாகி உள்ளூரில் வாழ்கின்றனர். அவரவர் உழைப்புக்கு ஏற்ற அளவான வாழ்க்கை.

வெளிநாடுகளிலிருந்து கிள்ளிக் கொடுக்கவோ அள்ளிக் கொடுக்கவோ யாருமில்லை.

வயதான அந்தத் தாய் தகப்பனும் தம்மளவில் உழைத்துச் சமைத்துத் தம்மளவில் சிக்கனமாக வாழ்கின்றனர்.

தாம் வயது முதிர்ந்து இயலாத கட்டத்தில் யார் கொண்டு போய்ப் பார்ப்பார்கள் என ஒரு ஏக்கம்.

இது பற்றி அவர்களது பிள்ளைகளுடன் கதைத்தால் "இப்பத்தைய காலத்துச் செத்த வீட்டுச் செலவுக்கு என்னால் ஏலாது. நான் கொண்டு போய் என்ர வீட்ட வைத்துப் பார்த்தால் என்னில செலவு பொறுத்துப் போடும் "

இப்படியொரு வாதம் சொல்கின்றனர்.

செத்த வீட்டுச் செலவுகளே பல இலட்சம் ரூபாவை எட்டிப் பிடித்துப் பெத்த பிள்ளைகளே வயது போன காலத்தில் பெற்றோரைப் பார்க்க முடியாத வாழ்க்கைக் கோலத்தை யார் தந்தது?

போர் தந்த புலம் பெயர்வும் பனியைத் தின்று உழைத்த காசைப் பணியப் போடும் ஊதாரிக் குணம் தான் எமக்குத் தந்தது.

உண்மையில் பிரேதப் பெட்டி என்பது மேற்கைத்தைய கிறீஸ்தவ முறை. ஒரு சில இலட்ச ரூபாவுக்குப் பிரேதப் பெட்டி எடுத்து விலாசம் காட்டுதல், பல்லாயிரம் ரூபாவுக்கு பாண்ட் பிடித்தல், சில ஆயிரம் ரூபாவுக்குச் சோடா, தண்ணீர்ப் போத்தல்,

> “வயதான அந்தத் தாய் தகப்பனும் தம்மளவில் உழைத்துச் சமைத்துத் தம்மளவில் சிக்கனமாக வாழ்கின்றனர். தாம் வயது முதிர்ந்து இயலாத கட்டத்தில் யார் கொண்டு போய்ப் பார்ப்பார்கள் என ஒரு ஏக்கம்.”

சில அல்லது பல ஆயிரம் ரூபாவுக்குப் பட்டாஸ் கொழுத்துதல், செலவுக்குக் கிடாய் அடித்தல், அந்தியேட்டி இரண்டு ஒன்று கீரிமலைச் சுற்றுலா, மற்றையது இன்னொரு நாள் வீட்டில், அந்தியேட்டிக்கு வருவோருக்கு சில்வர் பாத்திரம் அல்லது மரக்கன்று கொடுக்க வேண்டும்.

இவை யாவற்றுக்கும் கணக்கைக் கூட்டிப் பாருங்கள் வன் மில்லியன் ரூப்பி அதாவது பத்து இலட்சம் ரூபா வரும்.

கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி தானும் ஆடிய கதையாக உள்நாட்டு நாளாந்த உழைப்பாளர் பெத்து வளர்த்துப் பஞ்சம் பார்த்த தாய் தந்தையைப் பார்க்க முடியாத வாழ்க்கைக் கோலம் எம்மீது திணிக்கப்பட்டு விட்டது.

இதை மீறிச் சிக்கன நிகழ்வு நடத்த ஊருக்குப் பயம். அவர்கள் அப்படி நினைப்பார்கள். இவர்கள் இப்படிக் கதைப்பார்கள்.

யாருக்கோ ஒருவருக்காகச் சுயத்தை இழந்து போலியாக நடிக்கும் வாழ்க்கை தான் பலருக்கு.

எம்மைப் பற்றி நினைப்பவர்கள், விமர்சிப்பவர்கள் எமக்குக் காசு தரப் போவதில்லை.

அதைப் பற்றி நினைக்காமல் துணிச்சலாக முடிவு எடுங்கள்.

எம் வாழ்க்கை எமது கையில் தான். எமக்காகத் தான் நாம் வாழ வேண்டும். எமக்காக நாம் வாழும் போது மட்டுமே வீடும் உயரும். நாடும் உயரும்.

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

எளிதாக இந்த சிக்கலில் இருந்து காப்பாற்றுவார்கள் என்று தோன்றவில்லை. 2024 மார்ச் மாதம் வரையிலான காலத்திற்கு மற்றுமொரு 1.5 டிரில்லியன் டாலர் கடன் வாங்க அனுமதி கேட்கிறார் பைடன்.

அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டுமென்றால், அடுத்த நிதி ஆண்டில் (2023 அக்டோபர் 1 முதல் 2024 செப்டம்பர் 30 வரை) அரசு அதன் செலவுகளை 2022 ஆம் ஆண்டு அளவிலேயே வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்தடுத்த ஆண்டுகளில் 1% மட்டுமே செலவுகளைக் கூட்டலாம். இதைக் குடியரசுக் கட்சியினர், 'கடன் உச்சவரம்புச் சுருக்கம்' என்கிறார்கள்.

இதற்கு பைடன் ஒப்புக்கொண்டால் அவரது அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கும் கல்விக்கடன் தள்ளுபடி மற்றும் மின்சார வாகனங்களுக்கான சலுகைகள் போன்ற பலவற்றைச் செய்ய இயலாது. பைடன் இந்த நிபந்தனைகளுக்கு இதுவரை ஒப்புக்கொள்ளவில்லை. விஷயம் இழுபறியில் இருக்கிறது. நாட்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

## முதல்முறை அல்ல

இதுபோன்ற 'கடன் வாங்கமுடியா நெருக்கடி', 'டெட் சீலிங் கிரைசிஸ்' நிலை அமெரிக்காவில் வருவது இதுதான் முதல் முறையா என்றால், இல்லை. 1960-க்குப் பின் அடிக்கடி அதிலும் குறிப்பாக 1995, 2011 மற்றும் 2013 ஆண்டுகளில் வந்திருக்கிறது.

ஒவ்வொரு முறையும் அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதிய ஒப்புதல் பெற்று, வாங்கக்கூடிய கடன் அளவை உயர்த்திக் கொண்டே வந்திருக்கிறார்கள். பைடனுக்கு முன்பு, குடியரசுக் கட்சியின் டொனால்டு ட்ரம்ப் அதிபராக இருந்தபோதும் அப்போது இருந்த கடன் உச்சவரம்பை ஒன்றல்ல, மூன்று முறை உயர்த்தவேண்டிய நிலை வந்தது. காரணம், ட்ரம்ப் கொடுத்த வருமான வரிச் சலுகைகள்.

அப்போதைய எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் காங்கிரஸில் அதற்கு வாக்களித்து உதவினார்கள். ஆனால், இப்போது அவர்களே எதிர்க்கட்சியினரானதும், வரம்பை உயர்த்த நிபந்தனைகளை விதிக்கிறார்கள். இழுபறி தொடர்ந்து, நிலைமை கைமீறிப் போவது இரண்டு கட்சிகளுக்குமே கெட்ட பெயரைத்தான் பெற்றுக்கொடுக்கும்.

அந்த பயம் இரண்டு கட்சியினரிடமும் இருக்கிறது. காரணம், அடுத்த ஆண்டு வரும் அதிபர் தேர்தல். ஒருவேளை, ஜூன் 1-க்குள் 'டெட் சீலிங் கிரைசிஸ்' சிக்கல் தீரா விட்டால் என்ன ஆகும் என்பதை பலரும் யூகிக்கிறார்கள்.

என்ன நடக்கும்.. கட்டிடத்தின் முக்கிய பகுதியில் பெரும் சத்தத்துடன் விரிசல் விழுந்தால், அங்கு இருப்பவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள எப்படி, எங்கே ஓடுகிறோம் என்று தெரியாமல் நாலு பக்கமும் ஓடுவார்கள். இதுபோலத்தான், அது நிகழ்ந்தால், பலவற்றிலும் முதலீடு செய்திருக்கும் பெரு முதலாளிகள் அவர்கள் செல்வத்தைப் பாதுகாத்துக்கொள்ள, உடனடியாக விற்பார்கள், வாங்குவார்கள்.

அதனால், பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் விலை கடுமையாக சரியும், தங்கத்தின் விலை உயரலாம். வீடு, வாகன மற்றும் பிறகடன்களுக்கான வட்டி விகிதங்கள் அதிகரிக்கும். பொருளாதாரம் பாதிக்கப்படும், இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலை போகும். இன்னும் பலவும் நடக்கும்.

கடனுக்கான வட்டியைக் கொடுத்துவிட்டு ஊதியம், ஓய்வூதியம் ஆகியவற்றில் வேண்டுமானால் தாமதம் செய்ய வாய்ப்பிருக்கிறது அரசு புதிதாக ஒரு டிரில்லியன் மதிப்பிலான நாணயத்தை அச்சடித்து நிலைமையை சமாளிக்கலாம் ஐந்து குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் மாற்றி வாக்களித்தால் போதும், ஒப்புதல் சட்டம் நிறைவேறிவிடும் என்பது போன்ற ஊகங்களும் இருக்கின்றன.

எல்லாம் ஜூன் 1-க்குள் தெரிந்துவிடும். எதிர்க்கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்தி கடன் வரம்பை உயர்த்த, ஜப்பானில் நடைபெறும் ஜி 7 மாநாடு முடிந்தவுடன் ஜோ பைடன் ஆஸ்திரேலியா மற்றும் பிற நாடுகளுக்கு செல்லவிருந்த பயணத்தை ரத்து செய்துவிட்டு அமெரிக்க திரும்புகிறார்எப்படியோ, கடைசி நேரத்தில் கடன் வரம்பு உயர்த்தப்பட்டு, நிலைமை சமாளிக் கப்பட்டாலும், இப்படி ஒரு நிலை வந்தால் வேறு விளைவுகள் இல்லாமல் போகாது.

அமெரிக்கத் திறைசேரியில் பில் என்றால், பாதுகாப்பானது என்ற பெயர் கெட்டு, அதன் விற்பனை குறையும். இதனால், அவர்கள் வாங்கும் கடனுக்கு கூடுதல் வட்டி கொடுக்க வேண்டி வரும். வருமானத்தைக் காட்டிலும் மிக அதிகமாக செலவழிக்கும் அரசு, கடனுக்கு மேல் கடன் வாங்கும் அரசு, அது எவ்வளவு பெரியவலுவான நாடாக இருந்தாலும் பிரச்சினைதான். சொல்லப்போனால் அமெரிக்க அரசின் பொருளாதார சிக்கல், உலக பொருளாதாரத்துக்கே தலைவலிதான்.





# எங்கட ஆச்சி





- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

‘என்ரை அம்மா சொல்லித்தான் என்ரை அப்பா நான் தனக்குப் பிறந்தனான் எண்டு அறிஞ்சு கொண்டார். மணிவாசகர் சொல்லுறமாதிரி இவைக்குப் பிள்ளையாப் பிறக்க முந்தி நான் இன்னொருத்தனா இல்லாட்டில் இன்னொண்டா இதுக்கு முந்தியும் பிறந்திருக்கலாம். அப்ப எனக்கு வேறை வேறை அடையாளங்கள் இருந்திருக்கலாம்.’

ரெண்டு நிர்வாணங்கள் நிணப்பசி கூடி நெருங்கிக் கூடியதாலைதான் நான் பிறந்தனான். அதுகும் உரிஞ்சாங்குண்டியா நிர்வாணமாகத்தான் பிறந்தனான் எண்டு ஆச்சி நெடுகவும் சொல்லுவா. உண்ணான நான் பிறக்கேக்கை சாதி, சமயம், சமூகம், இனம், நாடு எண்ட எந்த அடையாளங்களும் என்னட்டை இருக்கேல்லை. உது தெரியா மல்த்தான் பிறந்தனான்.

பிள்ளைப் பெத்த களைப்பில கிடந்த என்ரை அம்மாட்டை பிள்ளைப்பெறுகிற விடுதியிலை அண்டைக்கு அம்மாக்கு பிள் ளைப் பேறுப் பாத்த நேர்ஸ் அம்மாட்டை உனக்கு ஆம்பிளைப் பிள்ளை பிறந்திருக்குது உதுதான் இந்தப் பிள்ளை எண்டு என்னைக் காட்டிச் சொல்லாட்டில் நான்தான் அவவுக்குப் பிறந்தன் எண்டது உண்ணான அம்மா வுக்குத் தெரிஞ்சிருக்காது. நேர்ஸ் சொன்ன நேரத்தை வைச்சுத்தான் என்ரை சாதகத்தை செல்லையாப் பண்டாரத்தார் எழுதினவர்.

அவள் நேர்ஸ் சொன்ன நேரத்தையே என்ரை அம்மா அவரிட்டை நான் பிறந்த நேரமாகச் சொன்னவ. தற்செயலா நேர்ஸ் நான் பிறந்த நேரத்தை மாத்திச் சொல லியிருந்தால் என்ரை சாதகமும் மாறி இருக்கும். ஆர் கண்டது. தற்செயலாக நான் வேறை ஆரோ ஒர் அம்மாக்குப் பிறந்திருந்தாலும் நேர்ஸ் என்னைக் கொண்டுபோய் என்ரை அம்மாக்குப் பக் கத்திலை கிடத்திப்போட்டு இவன்தான் உனக்குப் பிறந்தவன் எண்டு சொல்லியி ருந்தாலும் கூட என்ரை அம்மா என்னை அவவுக்குப் பிறந்ததாக ஏற்றுக்கொண்டி ருப்பா.

என்ரை அம்மா சொல்லித்தான் என்ரை அப்பா நான் தனக்குப் பிறந்தனான் எண்டு அறிஞ்சு கொண்டார். மணிவாசகர் சொல்லுறமாதிரி இவைக்குப் பிள்ளையாப் பிறக்க முந்தி நான் இன்னொருத்தனா இல்லாட்டில் இன்னொண்டா இதுக்கு முந் தியும் பிறந்திருக்கலாம். அப்ப எனக்கு வேறை வேறை அடையாளங்கள் இருந் திருக்கலாம். என்ரை அம்மாவும் அப்பாவும் சொல்லித்தான் எங்கடை சொந்தக்காரர் எல்லாம் என்னைத் தன்ரை சொந்தக்காரனா ஏற்றுக்கொண்டிச்சினம்.

நான் வளரேக்கை என்ரை அப்பா அம்மாவும் இதுதான் உன்ரை சமயம், இதுதான் உன்ரை மொழி, இதுதான் உன்ரை இனம், இதுதான் உன்ரை சனம், இதுதான் உன்ரை தேசம், இதுதான் உன்ரை சாதி, இதுதான் உன்ரை பண்பாடு, இதுதான் உன்ரை உடுப்பு, இதுதான் உன்ரை சாப்பாடு எண்டு சொல்லிச் சொல்லி வளத்தவை . அவை உப்பிடிச் சொல்லி வளர்க்காமல் விட்டிருந்தால் எனக்கு இப்படி யான அடையாளங்கள் இடப்பட்டிருக்க மாட் டாது இல்லாட்டில் வந்திருக்காது . இல்லாட் டில் தற்செயலா நான் காணாமல் போய் வேறு ஆரிட்டையுமோ வளந்திருந்தால் என்ரை இந்த அடையாளங்கள் வேறு மாதிரி இருந்திருக்கலாம் இல்லாட்டில் அடையாளங்கள் இல்லாத ஒருத்தனா கவே வளந்திருக்கலாம்.

நான் செத்த பிறகு சவத்தைக் கொண்டு போய் சுடலையிலை எரிச்ச பிறகு என்ரை சாம்பலிலைலோ இல்லாட்டில் கொண்டு போய்ச் புதைச்ச பிறகு உக்கி மிஞ்சும் என்ரை உக்கலிலைலோ இந்த எந்த அடையாளங்களும் இருக்காது எண்டு ஆச்சி சொல்லுவா. நான் பிறந்த பிறகு எல்லாரும் சேந்து எனக்குக் குடுத்த அடை யாளங்கள் எல்லாம் நான் செத்த பிறகு தன்ரை பாட்டிலை இல்லாமல் போகுது எண்டு சொல்லுவா.

என்னை மாதிரித்தான் எனக்கு இடப் பட்ட அடையாளங்கள் போலவே என்ரை பக்கத்து வீட்டிலை இருக்கிறவனும் அவ னுக்கு இடப்பட்ட அடையாளங்களோடை சீவிக்கிறான். நான் பிறந்து வளர்ந்த முறையால எனக்கு வந்த அடையாளங் களை நான் பெரிசா நினைக்கிற மாதிரி என்ரை பக்கத்து வீட்டுக்காரனும் தன்ரை அடையாளங்களைப் பெரிசா நினைக்கி றான்.

உதிலை என்ன விசயம் என்னவெண் டால் அவன்ரை அடையாளங்களை விட என்ரை அடையாளங்கள் பெரிசு எண்டு நான் நினைக்கேக்கை இல்லாட்டில் தன்ரை அடையாளங்கள் என்ரை அடையாளங் களை விடப் பெரிசு எண்டு அவன் நினைக்க வெளிக்கிட பிரச்சினையள் வருகுது. என்ரை அடையாளங்களை அவனும் அவன்ரை அடையாளங்களை நானும் மதிச்சம் எண்டால் செத்த பிறகு இல்லாமல் போற எங்களுக்குத் தற்காலிகமாக ஆரும் தந்த அடையாளங்களுக்காக அடிபட வேண்டிய சண்டை பிடிக்க வேண்டிய தேவைகள் வராது எண்டுவா ஆச்சி.

இப்படி நானும் பக்கத்து வீட்டுக்காரனும் ஆளாளுக்கு அடிபட்டு இருக்கிற சில அடையாளங்களைத் துலைக்கிறதோ இல்லாட்டில் புதிய அடையாளங்களைப் போட்டு அடையாள மாற்றம் செய்யிறதோ இல்லாட்டில் நானும் அவனும் சண்டை பிடிக்கிறதைச் சாட்டா வைச்சு இன்னொரு மூண்டாம் ஆள் வந்து நீங்கள் உங்கடை அடையாளங்களை விடுங்கோ உதாலை தான் கரைச்சல் எண்டுபோட்டு தன்ரை அடையாளங்களை எங்களுக்குத் தாற தேவையோ இருக்காது எண்டிற ஆச்சி உதாலைதான் எங்கடை பழைய ஆக்கள் “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” எண் டும் யாதும் ஊரே யாவரும் கேளிர்” எண்டும் சொல்லிபோட்டுப் போயிருக்கி னம் எண்டுபோட்டு ஆர் என்னத்தைச் சொன்னாலும் கெடு குடி சொல்லுக்கேளாது எண்டுவா...

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.05.2023இல் வெளியிடப்பெற்றது.